Registered as a Newspaper
பக்கங்கள் 16
விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
மக்கள் நாளிதழ்
Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 27 | 12-09-1993 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 206

## சில அரச ஆஸ்பத்திரி ஆய்வு கூட அறிக்கைகள் நம்பகமற்றவை

சில அரச ஆஸ்பத்திரிகளில் இரத்தம், சிறுநீர் ஆகியவற்றைப் பரிசோதனை செய்து தரப்படும் அறிக்கைகள் நம்பத்தக்கதாக இல்லை என்று சிறிலங்கா அரச மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்பவியலாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய சுகாதார அமைச்சுச் செயலாளர் ஜோ. பெர்னாண்டோ தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், தொழில்நுட்பவியலாளர் வெளியிலிருந்து இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளைக் கொண்டுவந்து ஆஸ்பத்திரி ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்கிறார்கள். ஆஸ்பத்திரிகளின் நிர்வாகமும், மருத்துவ நிபுணர்களும் இதுகுறித்து எனக்கு முறைப்பாடுகள் செய்துள்ளனர் என்றார். அத்துடன் ஆஸ்பத்திரி ஆய்வு (5ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் வழியில் தமிழர் தமிழீழம் பெறுவது உறுதி!

## மான்ஹற்றன் கூட்டத்தில் தெரிவிப்பு

[நியூயோர்க்]

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் காட்டிய வழியில் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து போராடினால் தமிழ் ஈழம் அமைவது உறுதி என்று அமெரிக்காவின் மான்ஹற்றன் நகரில் நடைபெற்ற கறுப்பு ஜூலை தின நிகழ்வில் கலந்து கொண்டு பேசியவர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம் 24ஆம் திகதி மான்ஹற்றன் நகரில் கறுப்பு ஜூலை தினத்தையொட்டி ஆர்ப்பாட்டப் பேரணி, பொதுக்கூட்டம், கண்காட்சி ஆகியன இடம்பெற்றன.

அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் தமிழ் ஈழமக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

கண்காட்சியில் சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைச் சித்தரிக்கும் சித்திரங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றை அமெரிக்கரும் பார்வையிட்டனர்.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழ் ஈழத்தேசிய விடுதலைப்போராட்டம் குறித்தும், தமிழீழமக்கள் மீதான சிறிலங்கா அரசின் வன்முறைகள் குறித்தனவான பேச்சுக்கள் இடம்பெற்றன.

தமிழ் ஈழத்தில் உணவு பற்றாக்குறையாக உள்ளது. மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மின்சாரம் ஒரு கனவாக உள்ளது எனவும் இந்தப் பேச்சுக்களில் தெரிவிக்கப்பட்டது. தமிழ் ஈழத் தமிழ்மக்களின் துயர் தீர்க்க பரந்துபட்ட தமிழர்கள் முன்வரவேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

## ஐ. நா. சபை காரியாலயம் முன் இலங்கைத் தமிழர் ஆர்ப்பாட்டம்

### கறுப்பு யூலையில் நடத்தினர்

(நியூயோர்க்)

கறுப்பு யூலை தினத்தை ஒட்டி கடந்த யூலை மாதம் 24-ம் திகதி ஐக்கிய ... பெற்றது. ஆர்ப்பாட்டப் பேரணியானது மான்ஹற்றன் நகரில் ஆரம்பித்து நியூயோர்க்கிலுள்ள ஐ. நா சபை அலுவல ... வில் அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். இவ் ஆர்ப்பாட்டப்பேரணியை ...

## 'குமணி' 15இல் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு "குமணி" கப்பல் நாளை கொழும்பு துறைமுகத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படவுள்ளது.

அங்கிருந்து புறப்படும் இக் கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி பருத்தித்துறை இறங்கு துறையை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(பா) (நி)

## கப். மலரவனின் 'போர் உலா' நேற்று வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கப்டன் மலரவனின் போர் உலா நூல்வெளியீட்டுவிழா நேற்று யாழ் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மலரவனின் அன்னையார் ஈகச் சுடரேற்றிவைக்க மலரவனின் உருவப்படத்தை மகளிர்படையணி தளபதி செல்வி விதுசா திரைநீக்கம் செய்து மலர் மாலை அணிவித்தார்.

விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் விழா நடைபெற்றது. இதுவரை காலமும் விரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கும் உயிர் நீத்த பொது மக்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதை அடுத்து விழா ஆரம்பமானது. வரவேற்புரையை யாழ் மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வாசுகி நிகழ்த்தினார். தொடர்ந்து செல்வி விதுசா மலரவனின் உருவப் படத்தை திரைநீக்கம் (6ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்கால நிகழ்வுகளை ஆவணப்படுத்த வேண்டும்

### அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

(யாழ்ப்பாணம்)

போர்க்கால நிகழ்வுகளை பதிவு செய்வதில் கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் முன்வர வேண்டும். இவ்வாறான நிகழ்ச்சிகளை சம்பவங்களை பதிவு செய்து ஆவணப்படுத்த வேண்டும் என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் ப. தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்தார்.

கப்டன் மலரவன் எழுதிய போர் உலா என்ற நூலின் வெளியீட்டுவிழா நேற்று மாலை பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; கப்டன் மலரவன் போராட்டத்துடன் இணைந்து குறுகியகாலத்திலேயே ஆற்றல் மிக்க போராளியாக மாறியவன். மாங்குளம், சிலாபத்துறை, காரைநகர், ஆனையிறவுப் பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்களின்போது போராளிகளின் பசிலன் அணியின் பொறுப்பாளனாகி முக்கிய பங்காற்றியவன். அவன் ஓய்ந்திருக்கக் காணப்பட்டதில்லை. எந்த நேரமும் சுறுசுறுப்பாக செயற்படும் இவன் தனது கடமைகளுக்கு இடையில் கிடைக்கும் சிறிது நேரத்தில் மிகக் குறைந்த வெளிச்சத்தில் எழுதிய குறிப்புகள் தான் இந்த நூல்.

அண்மையில் இந்தப் புத்தகத்தை எமது தலைவரிடம் எடுத்துச்சென்று காட்டினோம். அப்போது இப்படியொரு எழுத்தாளனாகிய (6ஆம் பக்கம் பார்க்க)

## சண்டை இலக்கியமாவதற்கு 'போர் உலா' எடுத்துக்காட்டு


### புதுவை இரத்தினதுரை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டை என்பது வேறு. இலக்கியம் என்பது வேறு என்று கருதுபவர்கள் இன்னும் எம்மிடையே உள்ளனர். ஆனால் சண்டை எப்படி இலக்கியமாகிறது என்பதற்கு இந்தப் போர் உலா ஒரு எடுத்துக்காட்டு என்று திரு. புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

நேற்றுமாலை பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கப்டன் மலரவன் ...

புதுவை இரத்தினதுரை மேலும் கூறுகையில், இந்த வகை இலக்கியங்களுக்கு இனிமேல்தான் பெயரிட வேண்டியிருக்கிறது. இவற்றைக் கதை என்பதா? நாவல் என்பதா? பயணக் குறிப்பு என்று குறிப்பிடலாமா? எந்தப் பெயர் கொண்டு அழைக்கலாம் என்பதை இனிமேல் முடிவு செய்யட்டும். ஆனால் விடிவுக்கு முந்திய மரணங்கள். தியாகப் பயணத்தில் திலீபனுடன் ...



பேரணி, பொதுக்கூட்டம், கண்காட்சி ஆகியன இடம் பெற்றன.

அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் தமிழ் ஈழமக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

கண்காட்சியில் சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது நடைபெற்ற அமெரிக்கவும் பார்வையிட்டனர்.

அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தமிழ் ஈழத்தேசிய விடுதலைப்போராட்டம் குறித்தும், தமிழ்ஈழமக்கள் மீதான சிறிலங்கா அரசின் வன்முறைகளிருந்ததுமான பேச்சுக்கள் இடம்பெற்றது. மின்சாரம் ஒரு தடையாக உள்ளது எனவும் இந்தப் பேச்சுக்களில் தெரிவிக்கப்பட்டது. தமிழ் ஈழத் தமிழ்மக்களின் துயர் தீர்க்க பரந்துபட்ட தமிழர்கள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

# ஐ. நா. சபை காரியாலயம் முன் இலங்கைத் தமிழர் ஆர்ப்பாட்டம்

## கறுப்பு யூலையில் நடத்தினர்

(நியூயோர்க்)

கறுப்பு யூலை தினத்தை ஒட்டி கடந்த யூலை மாதம் 24-ம் திகதி ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டப் பேரணியானது மாக் ஹற்றன் நகரில் ஆரம்பித்து நியூயோர்க்கிலுள்ள ஐ. நா சபை அலுவலகம் முன் முடிவுற்றது.

இவ் ஆர்ப்பாட்ட பேரணியில் அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். இவ் ஆர்ப்பாட்டப்பேரணியை அடுத்து பொதுக்கூட்டமொன்றும் நடைபெற்றது.

# தமிழர் மீது அடக்குமுறை; ஜெர்மனியில் கண்டன ஊர்வலம்

## உலகத்தமிழர் இயக்கம் ஏற்பாடு

(பேர்லின்)

தமிழர்கள் மீதான சிறிலங்கா அரசின் பல்வேறு அடக்குமுறைகளையும் கண்டித்து உலகத் தமிழர் இயக்கம் ஜெர்மனியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளது.

உலகத் தமிழர் இயக்கத்தின் ஜெர்மன் கிளையினரால் மொன்சன் நகரில் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது.

கடந்த 4ஆம் திகதி அன்று காலை 10மணிக்கு ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் மிரஷ்பன் பீன் மூஜ்பின் பகுதியில் முடிவடைந்தது.

பல்வேறு சுலோகங்களையும் கொண்ட அட்டைகளை தாங்கியபடி பல நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டார்கள்.

சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் இனவெறித் தாக்குதல்களையும், குண்டு வீச்சுக்களையும் நிறுத்துமாறும், தமிழ் மக்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குமாறும், வெலிப் பாதையில் நடைபெறும் படுகொலைகளை நிறுத்தி, பூநகரிப் பாதையைத் திறக்குமாறும், மனித உரிமை மீறல்களை நிறுத்துமாறும் கோரும் சுலோக அட்டைகளை தாங்கியபடி ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் கோஷங்களையும் எழுப்பினார்கள்.

# தலைவர் பிரபாகரனால் தமிழினத்திற்கு பெருமை

**- தொண்டமான்**

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு விடுதலைப்போராட்டத்தை நடத்துவன் மூலம் எல்லாத் தமிழர்களும் பெருமைப் படும் வகையில நடந்து கொள்கிறார், இவ்வாறு அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

உலகத்தமிழர்இயக்கத்தால் கனடாவில் நடாத்தப்படும் தமிழ் சேவை வானொலிக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இத்தகைய ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்துவது சாதாரண விடயமல்ல எனவும் அவர் கூறியுள்ளார். விடுதலைப் புலிகள் போராட்டத்தில் மட்டுமல்லப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதிலும் திறமை வாய்ந்தவர்கள் என்று அவர் பாராட்டியுள்ளார்.

## அதிரடிப்படை முகாம் மூடப்பட்டது

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி ஒந்தாச்சி மடம் அதிரடிப்படை முகாம் மூடப்பட்டது. கடந்த 8ஆம் திகதி மூடப்பட்ட இம் முகாமிலிருந்த படையினர் கோட்டைக்கல்லாறிற்கும் மட்டக்களப்பு நகரிற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

எதிர்பார்க்கப்படுகின்றது.

(பா) (தி)

தாளர்கள் முன்வர வேண்டும். இவ்வாறான நிகழ்ச்சிகளை

# சண்டை இலக்கியமாவதற்கு 'போர் உலா' எடுத்துக்காட்டு

## புதுவை இரத்தினதுரை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டை என்பது வேறு. இலக்கியம் என்பது வேறு என்று கருதுபவர்கள் இன்னும் எம்மிடையே உள்ளனர். ஆனால் சண்டை எப்படி இலக்கியமாகிறது என்பதற்கு இந்தப் போர் உலா ஒரு எடுத்துக்காட்டு ஒரு உதாரணம் என்று திரு. புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

நேற்றுமாலை பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கப்டன் மலரவன் எழுதிய போர் உலா நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மேலும் கூறுகையில், இந்த வகை இலக்கியங்களுக்கு இனிமேல்தான் பெயரிடவேண்டியிருக்கிறது. இவற்றைக் கதை என்பதா? நாவல் என்பதா? பயணக் குறிப்பு என்று குறிப்பிடலாமா? எந்தப் பெயர் கொண்டு அழைக்கலாம் என்பதை இனிமேல் முடிவு செய்யட்டும். ஆனால் விடிவுக்கு முந்திய மரணங்கள், தியாகப் பயணத்தில் திலீபனுடன் பன்னிருநாட்கள் போன்றவற்றின் வரிசையில் கப்டன் மலரவனின் போர் உலா ஒரு புதுவரவு ஆகும். போர்க்கால இலக்கியத்திற்கு ஒரு அளவுகோல் என்றும் தெரிவித்தார்.

கப்டன் மலரவன் எழுதிய போர் உலா என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று மாலை பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்; கப்டன் மலரவன் போராட்டத்துடன் இணைந்து குறுகியகாலத்திலேயே ஆற்றல் மிக்க போராளியாக மாறியவன். மாங்குளம், சிலாபத்துறை, காரைநகர், ஆனையிறவு ஒய்ந்திருக்கக் காணப்பட்டதில்லை. எந்த நேரமும் சுறுசுறுப்பாக செயற்படும் இவன் தனது கடமைகளுக்கு இடையில் கிடைக்கும் சிறிது நேரத்தில் மிகக் குறைந்த வெளிச்சத்தில் எழுதிய குறிப்புகள் தான் இந்த நூல்.

அண்மையில் இந்தப் புத்தகத்தை எமது தலைவரிடம் எடுத்துச்சென்று காட்டினோம். அப்போது இப்படியொரு எழுத்தாளனாக

(6ஆம் பக்கம் பார்க்க)

# சிறப்புற நடைபெற்ற பல்கலை. பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதின்மூன்றாவது பட்டமளிப்பு வைபவம் நேற்றுக் காலை 9 30மணி முதல் மூன்று அமர்வுகளில் கைலாசபதி கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விழாவுக்குத் தலைமை வகித்தார். முதலில் துணைவேந்தர் விளக்கேற்றிச் சம்பிரதாயபூர்வமாக விழாவைஆரம்பித்து வைத்தார்.

மொத்தம் 641 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் 498பேர் விழாவில் நேரில் சமுகமளித்துப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். நேரில் சமுகமளிக்காத நிலையில் 143பேருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பரீட்சைகளில் திறமையான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா அவர்களால் வழங்கப்பட்டன.

பட்டமளிப்பு விழாவை யொட்டி இன்று இராமநாதன் நுண்கலைக் கழகம் அளிக்கும் கலை நிகழ்ச்சிகள் கைலாசபதி கலையரங்கில் பகல்9.30முதல் 12மணிவரை நடைபெறவுள்ளன.



நேற்று நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உபவேந்தர் திரு அ. துரைராஜா

## 'குமாரி' புறப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறைஇறங்குதுறையில் பொருள்களை இறக்கி முடித்த 'குமாரி' கப்பல் நேற்று மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. இக் கப்பலில் யாழ். பிரதம தபாலகம் உள்ளூர், வெளியூர் தபால் பொதிகளையும் அனுப்பி வைத்துள்ளது.

மேலும் இக் கப்பலில் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் ஆகியோரும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டனர். அதேசமயம் 'வாதுவ' கப்பலில் இருந்து மா இறக்கப்பட்டு வருகின்றது.

# கொழும்பில் குண்டுவெடிப்பு ஏற்படலாமென சந்தேகம்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் குண்டுகள் வெடிக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் இதனால் அப்பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா புலனாய்வுத் துறையினரை மேற்கோள் காட்டி உத்தியோகபூர்வமற்ற செய்தி வெளியிட்டுள்ளது.

இதனையடுத்துகொழும்பின் முக்கிய சந்திகளில் வாகனங்கள் மறித்து சோதனையிடப்படுவதாகவும் பொதிகள் பரிசோதிக்கப்படுவதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வார இறுதியில் தேடுதல் நடத்திய சிறிலங்கா பொலிசார் நூற்றிற்கும் மேற்பட்டவர்களை கைது செய்ததாகவும், அவர்களை விசாரணைக்கு கூட்டிச் சென்றதாகவும்உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவர்களில் பல பெண்களும் அடங்குவர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலை மாதிரி அனுமதித் தேர்வு வினாத்தாள் 12-09-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-7397)

### உடன் விற்பனை

பெரியவில் சிங்கர் தையல் மிசின்கள் விற்பனைக்கு உண்டு பொ. செல்வரத்தினம், இருபாலை றோட், (பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின்முன்) கோண்டாவில். (5946)

### ஆங்கிலதினப் போட்டி.

(யாழ்ப்பாணம்)

வேலணை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும். (22)

### அரிசி இறக்குமதி செய்யப்படுமாம்

அரசு அடுத்த ஆண்டுக் கையிருப்புக்கென 1,00,000 மெட்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய உள்ளது.

அரிசி இறக்குமதி வியாபாரத்தில் அனுபவமுள்ள வர்த்தகர்களிடமிருந்து இதற்கான கேள்விப்பத்திரங்களை உணவு ஆணையாளர் கோரியுள்ளார்.

அடுத்த ஆண்டு பெரும்போகம் சிறுபோகச் செய்கைகளில் விளைச்சல் 1,00 000 மெட்றிக் தொன் வரை குறையும் என்று அரசு எதிர்பார்க்கிறது. பற்றாக் குறையை எதிர்பார்த்தே அரசு அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

### "நீமியா உரம்"

பயிர்களின் பாதுகாப்புக்கும், அமோக விளைச்சலுக்கும் மிக்கவைற் உற்பத்தியான "நீமியா உரம்" வடமராட்சி விவசாயிகளின் நலன் கருதி புலோலி, மற்றும் அம்பன் சமநல சேவை

## பனம்பழச்சாறில் புதுஉணவு தயாரிப்பதற்கு போட்டி

தமிழீழத்தில் கிடைக்கும்பல கோடி ரூபா பெறுமதியான பனம் பழச்சாறு வீணடிக்கப்படுவதை தவிர்த்து பலவகை உணவு வகைகளைத் தயாரிப்பதற்கு மக்களைத் தூண்டும் வகையில் போட்டிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தவுள்ளது.

இதுதொடர்பாக மேற்படி நிறுவனம் விடுத்துள்ள செய்தியின் விபரம் வருமாறு,

தமிழீழத்தின் இயற்கை வளமான பனை வளத்தில் இருந்து கிடைக்கும் பல கோடி ரூபா பெறுமதியான பனம் பழச்சாறு உரிய முறையில் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுகின்றது

பனம் பழத்தில் இருந்துநம் முன்னோர் பனாட்டு, பணியாரம் போன்ற உணவுப்பண்டங்களைத் தயாரித்து தமது அன்றாட உணவுத் தேவைக்குப் பயன்படுத்தினார்கள். தற்போது இப்பாவனைப் பழக்கம் அருகி சிறிய அளவிக்கவைச் சிற்றுண்டியாகவே பயன்படுத்தப்படுகின்றது.

பனம்பழச் சாற்றில்இருந்து ஜாம், மென்பானம், ரொபி, போன்ற பொருள்கள் தற்போது தயாரிக்கப்பட்ட போதும் இன்னும் பெருந்தொகையான பனம் பழச்சாறு பயன்படுத்தப்படாமலே வீணடிக்கப்படுகின்றது.

இப்பனம் பழச்சாற்றை முற்றுமுழுதாகப் பயன்படுத்துவதற்கும் எமது அன்றாட உணவுத் தேவைக்கும், ஏற்றதி வர்த்தகத்திற்கும் பயன்படுத்தக்கூடிய, புதிய உணவு வகைகளை தயாரிப்பதற்கு மக்களைத் தூண்டும் வகையில் போட்டிகளை நடாத்துவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப்பகுதி திட்டமிட்டுள்ளது.

01. பனம்பழச்சாற்றில் இருந்து ஒருநேர உணவாக மக்கள் அன்றாடம் விரும்பிப் பாவிக்கக் கூடிய புதிய உணவு

02. பனம்பழச்சாற்றில் இருந்து கைத்தொழில் ரீதியில் தொடர்ச்சியாக தயாரிக்கக் கூடிய ஏற்றுமதித்தரம் வாய்ந்த புதிய உணவு என இரு வகையாக அமையும்.

இவ்விரு போட்டிகளும் யாழ் மாவட்டத்திலும், வன்னி மாவட்டத்திலும் தனித்தனியாக நடாத்தப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒவ்வொரு போட்டிக்கும் தலா மூவர் தெரிவு செய்யப்பட்டு முதலாம் பரிசாக ஒரு பவுண் எடையுள்ள தங்கப்பதக்கமும், இரண்டாம் மூன்றாம் பரிசாக முறையே மூவாயிரம் (3000) ரூபாவும், இரண்டாயிரம் (2000) ரூபாவும் வழங்கப்படவுள்ளன

இப்பரிசுகளுடன் வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்போட்டியில் எவரும் பங்கு பற்றலாம்.

### தாண்டிக்குளத்தில் ஒருவர் கைது

[வவுனியா]

சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினர் தாண்டிக்குளம் தடைமுகாமில் வைத்து இளைஞர் ஒருவரைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த 8ஆம்திகதி பிறவுண் கொம்பனியில் உள்ள புலனாய்வுப் பிரிவினர் புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த ராசா என்பவரையே கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

### தையல் கண்காட்சி

[தொல்புரம்]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் பிரதேச நிலைய ஒராண்டு பூர்த்தி விழாவும், தையல் கண்காட்சியும் எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறவுள்ளன. (41)

### பனிசளிப்புவிழா

(தென்மராட்சி)

### விருதுகள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

1991-92 கல்வியாண்டில் யாழ்பல்கலைக்கழக ஹொக்கி அணியினர் பதினொரு பேருக்கு 'விருதுகள் இரவில்' விருதுகள்வழங்கப்படவுள்ளன.

இவ்வணியினர் மாவட்டரீதியில் யாழ் செயலகத்தினால் நடாத்தப்பட்ட ஹொக்கிப் போட்டியிலும் உதயன்-சஞ்சீவி நிருவாகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் மாவட்டமட்டத்தில் சம்பியனாவது தெரிந்ததே.

இதேவேளை கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் ஆட்ட சிறந்த வீரர்களுக்கு விருதுகள் இரவில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது

### ஜெயின் ஆணைக்குழு மேலும் நீடிப்பு

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ளது

## சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரி யாழ் விஜயம்

யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு திரும்பிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் கள அதிகாரி கிறிஸ்டி எபல் (Christine Abel) தனது விஜயத்தின் முழு விடயத்தையும் தமது தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

கூடுதலான வேலை திட்டங்களை தாம் யாழ்ப்பாணத்திற்கு செய்யவிருப்பதாக அவர்மேலும் தெரிவித்தார் விவசாயம், சுகாதாரம் பண்ணைஅபிவிருத்தி ஆகிய திட்டங்களின் கீழ்தாம் திட்டங்களை செயல்படுத்த இருப்பதாக அவர்மேலும் தெரிவித்தார் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் பல அடிப்படைவசதிகள் அற்ற நிலையிலும் யாழ்ப்பாணத்திற்காக செயல் திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச), (நி)

### ஆகஸ்ட்மாத நிவாரணம்

இடம் பெயர்ந்தோருக்கான ஆகஸ்ட் மாத இறுதி இரண்டு வார இலவச நிவாரணப் பொருட்களில் மா இடம் பெறவில்லை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் விநியோகப் பட்டியலின்படி அரிசி, சீனி, சோப், தெம்பிப் பருப்பு, பால்மா, நெயிலை, ஆகிய பொருள்களே மேற்படி விநியோகத்தின் போது வழங்கப்படும். (22)


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

VON RYAN'S EXPRESS

இத்துடன் 'இதயபூமி 1' [மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00மணி (சி-7852)


### காணவில்லை



பிரதாகரன

இவர் கடந்த 4-9-93 அன்று பி.ப 3 மணிக்கு ரியூசனுக்கு என்று சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை.

## நினைவு கூருகின்றோம் ... 1993-09-12

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - பன்குளம், தவரங்கட்டு, திருக்கடலூர்ப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 67 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவ அத்துமீறல்... தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய - கிளிநொச்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர்

ராஜேந்தர் [ஜெகதீசன் பகீரதன் - கல்லூரிவீதி, காங்கேசன்துறை - யாழ்]

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்கள் இருவர்.

வவுனியா - பண்டாரிக்குளம் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்.

1988ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளி, இரணைக்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப் ராமு [மாரிமுத்து ராமசாமி - குச்சவெளி - திருமலை]

1989ஆம் ஆண்டு இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

நேரு [கணபதிப்பிள்ளை அழகரட்ணம் - கட்டுக்குளம் - திருமலை]

மட்டு சந்திவெளியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்மகன் -

1990ஆம் ஆண்டு யாழ் மயிலிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கலாபரன் [ - மனோஜ்குமார் - சேனைத்தெரு, கருவேப்பங்கேணி - மட்டு]

அம்பாறை, பொத்துவில், கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டு சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் ஓட்டமாவடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழ்ப் பெண்கள்

யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட 08 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். சிங்கர் [கந்தசாமி ஒவியராஜ் - கிரான் - மட்டு]

பாலு [சாமித்தம்பி திவ்வியராஜா - புதுக்குடியிருப்பு - மட்டு]

லெப். வசி [அண்ணாமலை செல்வயோகன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை - மணலாறு]

2-ம் லெப். பிரபு/நெல்சன் [தர்மலிங்கம் ராஜ்குமார் - குமுழமுனை - மணலாறு]

2-ம் லெப். மாலினி [நாகேஸ் சிவானந்தன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை - மணலாறு]

ரகுநாத் (ஆறுமுகம் பேரின்பராஜா - தண்ணீரூற்று, முள்ளியவளை - மணலாறு)

வினோத்/அமிர்தநாதன் (குமார் பாலசுந்தரம் - தண்ணீரூற்று, முள்ளியவளை - மணலாறு]

2 ம் லெப். நிரஞ்சன் (கனகசபை இராஜேந்திரம் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

மதி (மாரிமுத்து ஜீவகுமார் - வசந்தபுரம், செருட்டமடு - ஒட்டிசுட்டான்)

தேவாதி (அழகு ரவீந்திரன் - முரசுமோட்டை, பரந்தன்-

அடுத்த ஆண்டு பெரும் போகம் சிறுபோகச் செய்கைகளில் விளைச்சல் 1,00 000 மெட்ரிக் தொன் வரை குறையும் என்று அரசு எதிர்பார்க்கிறது. பற்றாக் குறையை எதிர்பார்த்தே அரசு அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

## "நீமியா உரம்"

பயிர்களின் பாதுகாப்புக்கும், அமோக விளைச்சலுக்கும் மில்க்வைற் உற்பத்தியான "நீமியா உரம்" வடமராட்சி விவசாயிகளின் நலன் கருதி புலோலி, மற்றும் அம்பன் சமதல சேவை நிலையங்களில் விற்பனைக்கு உள்ளது. ஒரு கிலோ பக்கற் விலை. ரூ 17/-. 20 கிலோ கொண்ட பொதி ரூ 300/- வாங்கிப் பயன் பெறுங்கள்.

"மில்க்வைற்" (சி-7408)

... த்து வைத்துள்ளனர்.

கடந்த 8 ஆம்திகதி பிறவுண் கொம்பனியில் உள்ள புலனாய்வுப் பிரிவினர் புதுக்குடியிருப்பினைச் சேர்ந்த ராசா என்பவரையே கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

## தையல் கண்காட்சி

[தொல்புரம்]

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் பிரதேச நிலைய ஓராண்டு பூர்த்தி விழாவும், தையல் கண்காட்சியும் எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறவுள்ளன. (41)

## பரிசளிப்புவிழா

(தென்மராட்சி)

கா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா 14-9-93 செவ்வாய் கிழமை பி.பகல் 4 மணிக்கு வித்தியாலயத்தில் அதிபர் திரு த. கந்தையா தலைமையில் இடம் பெறும். (86)

... யில் யாழ் செயலகத்தினால் நடாத்தப்பட்ட ஹொக்கிப் போட்டியிலும் உதயன்- சஞ்சீவி நிருவாகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலும் மாவட்டமட்டத்தில் சம்பியனாவது தெரிந்ததே,

இதேவேளை கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் ஆட்ட சிறந்த வீரர்களுக்கு விருதுகள் இரவில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது

## ஜெயின் ஆணைக்குழு மேலும் நீடிப்பு

[சென்னை]

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ளது ஜெயின் ஆணைக்குழுவின் விசாரணைக்காலம் மேலும் ஆறுமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இக் கொலை தொடர்பான சதி முயற்சிகள் பற்றிய விடயங் களையிட்டு இக் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது.

# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

(1) றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

(2) றீவைன்டிங்

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைன்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 5 மாதம

(3) மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம்

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட பைசிக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

(4) ✶ "Special English Class"

2ஆவது பிரிவு ஆரம்பம் 15-09-93(கிழமை நாட்கள்)

விபரங்களிற்கு:

**Jaffna Technical Institute**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவை அருகாமை - மேல்மாடி) (சி-7377)



## பிரதாகரன

இவர் கடந்த 4-9-93 அன்று பி. ப 3 மணிக்கு ரியூசனுக்கு என்று சென்றவர் இன்னும் வீடு திரும்பவில்லை. வயது 12,7-ம் ஆண்டு மாணவன், போகும்போது கறுப்புநிற காற்சட்டையும், மெல்நிற அரைக்கைச் சேட்டும் மோதிரமும் அணிந்திருந்தார். வெள்ளை நிறம், மேவிக்தலை இழுப்பவர், கொண்டு சென்ற சைக்கிள் நம்பர் (HERO) 1840460 இவர் எங்கிருந்தாலும் தயவு செய்து அறியத் தரவும். எமக்கு அறிந்தவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை மகனே உனது தகவலறியாது தவிக்கின்றோம்

தகவல் தரவேண்டிய முகவரி

K. நடராசா (குஞ்சு)
மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(5938)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 28-12-1923

உதிர்வு: 13-08-1993

அமரர்

## செல்லையா மயில்வாகனம்

[ஓய்வுபெற்ற அதிபர், மல்லாவி மகாவித்தியாலயம்]

அறமொடு கல்வியில் ஆசனாய் ஒளிபரப்பி
தேன்தரு வாழ்வில் நல்லறமும் காட்டி
நாளும் நினைந்துருக நாமும் மற்றோரும் நண்பரும் - தவித்திருக்க
விரைந்த நாளும் முப்பத் தொன்றானதுவே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பணிந்தனமே

பழம் பிள்ளையார் வீதி,
மல்லாகம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[5950]

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். சிங்கர் [கந்தசாமி ஒலியராஜ் - கிரான் - மட்டு]
பாலு [சாமித்தம்பி திவ்வியராஜா - புதுக்குடியிருப்பு - மட்டு]
லெப். வசி [அண்ணாமலை செல்வயோகன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை - மணலாறு]
2-ம் லெப். பிரபு/நெல்சன் [தர்மலிங்கம் ராஜ்குமார் - குமுழமுனை - மணலாறு]
2-ம் லெப். மாலினி [பாசுகி சிவானந்தன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை - மணலாறு]
ரகுநாத் (ஆறுமுகம் பேரின்பராஜா - தண்ணீரூற்று. முள்ளியவளை - மணலாறு)
வினோத்/அமிர்தநாதன் [குமார் பாலசுந்தரம் - தண்ணீரூற்று, முள்ளியவளை - மணலாறு]

2-ம் லெப். நிரஞ்சன் (கனகசபை இராஜேந்திரம் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)
மதி (மாரிமுத்து ஜீவகுமார் - வசந்தபுரம், செருட்டமடு - ஒட்டிசுட்டான்)
சேனாதி (அழகு ரவீந்திரன் - முரசுமோட்டை, பரந்தன் - கிளிநொச்சி)
மேஜர் விசு (சாந்தன் அன்ரன் - மாளிகைத்திடல், திருக்கேதீஸ்வரம் - மன்னார்)
ஏஞ்சல் (செல்வி சுப்பிரமணியம் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)
கப்டன் பகீர்/பகீரதன் (பாக்கியநாதன் அன்ரனி நிமால் - போயிட்டி, இளவாலை - யாழ்)
கியேர் (நந்தினி தர்மலிங்கம் - கரணவாய் தெற்கு. கரவெட்டி - யாழ்)
மாறன் (அரைரட்ணம் ராஜாரகுநாத் - வல்வெட்டித்துறை)

மட்டு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

பிரேம்குமார் (விநாயகமூர்த்தி ரவிச்சந்திரன் - திருக்கோயில் - அம்பாறை)
ஜெயகணேஷ் (நமசிவாயம் ரஜனிகாந் - கல்முனை - அம்பாறை)
மதன் ( — சோமசுந்தரம் - மகிழூர்முனை, களுவாஞ்சிக்குடி - மட்டு)
சுந்தரம் (கந்தையா போகராசா - கோரக்கல்லிமடு - மட்டு)
வில்லியம் (கணபதிப்பிள்ளை செல்வராசா - அம்பிளாந்துறை - மட்டு)
வாமன் (கனகசபை தேவா - தமாதகந்தோர் வீதி, காரைநகர் - யாழ்)

மட்டு - களுவாஞ்சிக்குடி, பெரியபோரதீவு முகாமிலிருந்து வெளியேறி திருப்பழுகாமம் பகுதியை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்ட மாணவன், இளைஞன் உட்பட 04 தமிழர்கள்.

மண்டைதீவில் நிலைகொண்டிருந்த பகுதியிலுள்ள கிணறுகளிலிருந்து இதே தினத்தில் எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்ட 24 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு காரைநகரிலுள்ள தூம்பில்பிட்டிப் பகுதியில் வேவு பார்க்கச் சென்றபோது சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். தங்கன் (சிவபாதம் பரமேஸ்வரன் - வேலணை மேற்கு - வேலணை)
கரிகாலன்/பதுமன் (வீரையா வீரபூரணகுமார் - வேலணை கிழக்கு - வேலணை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[அ-7405]

Chundikuli Branch Library

# ராணுவ அதிகாரிகள் கடிதம் அதிரடிப்படை உதாசீனம்

(மட்டக்களப்பு)

மண்முனை விசேட அதிரடிப்படை முகாமின் சோதனை நிலையத்தில் உள்ள விசேட அதிரடிப்படையினர் பொலிசாரினாலோ, இராணுவ பிரிகேடியரினாலோ வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள், கடிதங்கள் என்பவற்றை மதிப்பதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சோதனை முகாமிலுள்ள விசேட அதிரடிப்படையினர் மக்கள் கொண்டு வரும் இராணுவ பிரிகேடியர், பொலிசார் ஆகியோர் அனுமதி வழங்கிய பொருள்களை பறிமுதல் செய்கின்றனர். பறிக்கப்படும் பொருள்களில் பில்கங் வகைகளை அதிலேயே வைத்து தின்றுவிட்டு செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றனர். பறிமுதல்செய்யும் பொருள்களை கொண்டு செல்வதானால் தமக்கு பொறுப்பான அதிகாரியின் அனுமதிப்பத்திரத்தை பெற்றுவருமாறு அதிரடிப்படையினர் கூறுகின்றனர்.

## 5 மாதங்களின்பின் அனுதாபம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் மறைந்த லலித் அத்துலத்முதலிக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுதாப உரைநிகழ்த்தினர். அத்துலத் முதலி கடந்த ஏப்ரல் மாதத்தில் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குடும்பநல சேவையாளர்கள் 19 பேர் புதிதாக நியமனம்

[யாழ்ப்பாணம்]

குடும்ப நலசேவையாளர் பரீட்சையில் சித்திபெற்ற 19 பேர் யாழ் மாவட்டத்திற்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் புதிதாக நியமனம் பெற்றுள்ளார்கள் இவர்களுடன் சேர்த்து மொத்தம் 92 பேர் பணியாற்றுகின்றபோதிலும்மேலும் 201வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளது தெரிய வந்துள்ளது.

கடந்த வருடம்ஏப்ரல்மாதம் நடைபெற்ற இப்பரீட்சையின் பெறுபேறு அதேவருடம் ஆகஸ்ட் மாதம் வெளிவந்த போதும் அதில் சித்திபெற்றவர்களுக்கு இப்போதுதான் நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பரீட்சை எழுதியவர்கள் குடாநாட்டில் ஏற்கனவே குடும்பநல சேவையாளர் பற்றாக்குறை காரணமாக பரீட்சை எழுதிய பின் இதுவரை ஊக்குவிப்பு கொடுப்பனவு ஒன்று வழங்கப்பட்டு பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

யாழ் குடாநாட்டுக்கு 293 குடும்பநல சேவையாளர்கள் பணியாற்ற வேண்டிய போதிலும்இதுவரை73பேரேபணியாற்றி வந்துள்ளனர் கடந்தமுதலாம் திகதி நியமிக்கப்பட்ட 19 பேருடன் சேர்த்து 92 ஆக அதிகரித்துள்ள போதிலும்மீதமுள்ள 201 வெற்றிடங்களும் நிரப்பப்படாமலேஉள்ளதுகுறிப்பிடத்தக்கது.

மூவாயிரம் பேருக்கு ஒரு குடும்பநலசேவையாளர் என்ற வகையில் சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனையின் கீழ் மொத்தம் 333 பேர் தேவை. அதில் யாழ் குடாநாட்டுக்கு 293 பேரும் கிளிநொச்சிக்கு 40 பேரும் தேவையாக இருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் 92 பேரும் கிளிநொச்சியில் 12 பேரும் மட்டுமே பணியாற்றி வருகிறார்கள் என மேலும் தெரியவந்துள்ளது. (இ)

## மூடப்பட்ட கிளை

(வடமராட்சி)

கரவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை (இல.8) தொடர்ந்து மூன்று தினங்களாக இயங்காத நிலையில் மூடப்பட்டுக் கிடக்கிறது. இக்கிளையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் பாவனையாளர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்கிளை முகாமையாளரை மாற்றுவது சம்பந்தமாக எழுந்த விவகாரத்தினாலேயே கடந்த சில நாட்களாக இக்கிளை மூடப்பட்டுள்ளது. (யோ)

## இழுவைப் படகு போதியளவு இல்லை

திருக்கோணமலையிலிருந்து ஒரு தொகுதி மாவுடன் புறப்பட்ட 'சாதுவ' கப்பல் நேற்று முன்தினம் காலை வருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பல் பின்பும் காங்கேசன் துறைக்குச் சென்று தரித்து நிற்கிறது. இன்று


இன்று

மாபெரும் இசை நிகழ்ச்சி

விடுதலைப் புலிகள்

கலை பண்பாட்டுக் கழகத்தினரால்

நடாத்தப்படும்

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக் குழுக்களான

"ராஜன் - சுசீந்திரன்"

ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

"காற்றினிலே வரும் கீதம்"

இடம்: மானிப்பாய் மாவீரர் கலையரங்கு.

காலம்: 12-09-93 சனிக்கிழமை

நேரம்: மாலை 7.00 மணி.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

[1] பௌதிக இரசாயனவியலில் பேராசிரியர் / புள்ளி விபரவியலில் பேராசிரியர்

[2] சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 2/ விரிவுரையாளர் (தகுதி காண்) / உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) / தாவரவியல் / இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளிவிபரவியலும் / பௌதிகவியல் / விலங்கியல்

[3] தற்காலிக உதவி விரிவுரையாளர் / தாவரவியல் / இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / கணிதமும் புள்ளி விபரவியலும் / பௌதிகவியல் / விலங்கியல்

[4] தற்காலிக செய்முறை காட்டுனர் / தாவரவியல்/இரசாயனவியல் / கணனி விஞ்ஞானம் / பௌதிகவியல்/ விலங்கியல்

[5] தற்காலிக போதனாசிரியர் கணிதமும் புள்ளி விபரவியலும்

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென துறைத் தலைவராலும் பீடாதிபதியாலும் உறுதிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) ஒருவருக்கு விரிவுரையாளர் [தகுதிகாண்] என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் நுழைவேற்ற ரசி ரூபா 6050 - 10 x 250 - 8550/- (மாதமொன்றிற்கு) என்ற சம்பள அளவுத்திட்டத்தில் அவரை வைக்கவும் முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல்பிரிவு) உடன் சித்திபெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர் (தகுதி காண்), ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத்திட்டம் 1994-01 01இல் இருந்தே அமுல்படுத்தப்படும்.

சம்பள அளவுத்திட்டம்

பேராசிரியர்
— ரூபா 16100 - 6 X 400 - 18.500/- [மாதமொன்றிற்கு]

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1
— ரூபா 12275 - 8 X 325 - 15,325/- [மாதமொன்றிற்கு]

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 2
— ரூபா 10650 - 5 X 325 - 12,275/- [மாதமொன்றிற்கு]

விரிவுரையாளர் (தகுதிகாண்)
— ரூபா 6050 - 10 X 250 - 8550/- (மாதமொன்றிற்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
— ரூபா 5270/- மாதமொன்றிற்கு [நிலையானது]

தற்காலிக உதவி விரிவுரையாளர்
— 1993-12-31ஆம் திகதி வரை ரூபா 4585/- [நிலையானது] மாதமொன்றிற்கு.
1994-01-01இல் இருந்து ரூபா 5,270/- [நிலையானது] மாதமொன்றிற்கு

★★ தற்காலிகச் செய்முறை காட்டுனர்
— 1993-12-31ஆம் திகதிவரை ரூபா 3835/- [நிலையானது] மாதமொன்றிற்கு.
— 1994-01-01இல் இருந்து

## மிரட்டிப் பணம் பறித்த சப்-இன்ஸ்பெக்டர்கள் கைது

(கொழும்பு)

இரண்டு பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் கட்டாயப்படுத்தி கிராண்பாஸ் வியாபாரிகளிடம் 55.000 ரூபா பணம் பறித்த குற்றத்திற்காக கொழும்பு பிரதம நீதிபதியினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இரு வியாபாரிகளும் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்தே லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் இந்த இரு சப்-இன்ஸ்பெக்டர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்கள்.

வியாபாரி ஒருவரின் வீட்டுக்குச் சென்ற இவர்கள் போதைப் பொருள் பொதியொன்றைக் காட்டித் தமக்கு பணம் தராதுபோனால் சம்பந்தப்பட்ட வியாபாரியைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்போவதாக மிரட்டியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து வியாபாரியின் வீட்டிலிருந்து 80,000 ரூபா பணத்தில் 40,000 ரூபாவைத் தங்கள் பங்கு என்று இவர்கள் கையாடியதாகப் புகார் தெரிவிக்கப்பட்டது. இதே மாதிரிச் சூழ்நிலையில் மற்றையமுதலாளியையும்பயங்காட்டி 10,000 ரூபா வசூலிக்கப் பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணையின்போது இரு சப்-இன்ஸ்பெக்டர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இணைந்தபல்கலைக்கல்லூரி மூடப்பட்டதாக அறிவிப்பு

[வவுனியா]

வவுனியாவிலுள்ள இணைந்தபல்கலைக்கழக கல்லூரி மறு அறிவித்தல்வரை மூடப்பட்டிருக்கும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பொலிசார் மூலம் மாணவருக்கு அறிவித்ததையடுத்து பல்கலைக்கழக வளவிலுள்ள அறையொன்றில் இரு அதிகாரிகளைப்பூட்டிவைத்து 'கேரோ' செய்த மாணவர்கள் தமது 'கேரோ'வை கைவிட்டு வெளியேறினர். பொலிசார், அதிகாரிகள் இருவரையும் அறையைத் திறந்து விடுதலை செய்தனர்.

கல்லூரியை மூடும் அறிவித்தல் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் மாணவருக்கு தெரிவிக்கப்பட்டது. அங்கு பொலிசார் காவலில் ஈடுபட்டுள்ளனர். மேற்படி கல்லூரியின் புதிய மாணவர்களுக்கான பதிவு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் மாணவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் பற்றி கல்லூரி நிர்வாக மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

## தொழுநோய் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

குடாக்கனை சுழிபுரம் பகுதியில் தொழுநோய்பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மானிப்பாய் சுகாதார உத்தியோகஸ்தர்கள் குடாக்கனை பகுதி மக்களுக்கு நாளை 13ஆம் திகதி தொழுநோய் குறித்த சுகாதாரக் கல்விக் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளனர்.

இப் பகுதியில் இரண்டு தொழு நோயாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்தே அப் பகுதியில் மேற்படி சுகாதார கருத்தரங்கை நடத்தவுள்ளதாகவும் அதைத் தொடர்ந்து தொழுநோய் ஆய்வு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற வாராந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சுகாதாரக் கல்வி குடாக்கனை ஆரம்ப சிறுவர் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் குணரட்ணமும்

## சுகாதார பரிசோதகர்களுக்கு 3நாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுகாதார பரிசோதகர்களுக்கு மூன்று நாள் பயிற்சி ஒன்றை தாதிகள் பயிற்சிக்கல்லூரியில் வரும் 13ஆம் திகதியும் 20ஆம் திகதியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் நடத்தவுள்ளது.

மேற்படி பயிற்சி நெறி இதுவரை குடும்பநல சேவையாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டு வந்தது இம்முறையே சுகாதார பரிசோதர்களுக்கும் இப்பயிற்சியை வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டது 13 ஆம்திகதி தொடக்கம் 16ஆம் திகதிவரை ஒரு குழுவுக்கும் 20ஆம்திகதிமுதல் 23ஆம்திகதி வரை ஒரு குழுவுக்குமாக இரண்டு குழுக்களாக பிரித்து இப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகிறது.

மாபெரும் இசை நிகழ்ச்சி

## விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால்

நடாத்தப்படும்

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக் குழுக்களான

"ராஜன் - சாந்தன்"

ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

"காற்றினிலே வரும் கீதம்"

இடம்: மானிப்பாய் மாவீரர் கலையரங்கு.

காலம்: 12-09-93 சனிக்கிழமை

நேரம்: மாலை 7.00 மணி.

அனைத்து மக்களும் அணிதிரண்டு வருக

ரிக்கட் பெறும் இடங்கள்:
குலம் கிறீம் ஹவுஸ்,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
சண் றைக்கோடிங் சென்ரர் நியூமாக்கற்.
மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:
வர்த்தகர் சங்கம். யாழ்ப்பாணம் (இ-7403)



## நியூட்டன் அக்கடமி

இருபாலை வீதி, கோண்டாவில்.

1993-ல் O/L

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு...

துரித மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பமாகிவிட்டன.

கணிதம்: எஸ். கருணாகரன்

சனி, ஞாயிறு காலை 6.45 செவ்வாய் - மாலை 4.30

விஞ்ஞானம்: இரா. அருட்செல்வம்

சனி ஞாயிறு காலை 8.30 மணி

ஆண்டு 04 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(5937)


மூடப்பட்டுக் கிடக்கிறது. இம் நிலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் காவலை மாணவர்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்கிளை மூகாமையாளரை மாற்றுவது சம்பந்தமாக எழுந்த விவகாரத்தினால் வேலைபேசுகடந்த சில் டாம்திகதிமுதல் கிளை மூடப்பட்டுள்ளது. (யோ)

## இழுவைப் படகு போதியளவு இல்லை

திருக்கோணமலையிலிருந்து ஒரு தொகுதி மாவுடன் புறப்பட்ட 'சாதுவ' கப்பல் நேற்று முன்தினம் காலை பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்து சேர்ந்தது.

இக்கப்பல் மீண்டும் காங்கேசன் துறைக்குச் சென்று தரித்து நிற்கிறது. இன்று ஞாயிற்றுக்கிழமை மா இறக்குவதற்காக பருத்தித்துறை துறைமுகம் வரும்.

பருத்தித்துறை இறங்கு துறைக்கு போதிய இழுவைப் படகுகள் இல்லாத காரணத்தினாலேயே இக்கப்பல் காங்கேசன்துறையில் கிணைதரித்து நிற்க வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட நல்ல நிலையில் இல்லாத இழுவைப் படகுகள் 'குமாரி'யில் இருந்து பொருள்களை இறக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. [யோ]

## றுகுணுவில் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

ஒய்வூதியர்களுக்கான செப்டம்பர் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் அடுத்த கிழமை பகுதிதிதுறை வந்தடையவுள்ள றுகுணு கப்பலில் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

செப்டம்பர் மாத ஒய்வூதியத்துடன் சேர்த்து கடந்த ஜூலை மாதம் நிறுவை அரிசாரம் வழங்க அனுமதிக்கப்பட்ட ஒய்வூதியர்களுக்கான 260 ரூபா அலவன்ஸ் நிலுவையும் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [பா]

## தங்க விருது வழங்கப்பட்டது

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் இருபத்தைந்து வருட சேவையைப்பூர்த்தி செய்த ஊழியர்களுக்கு தங்க விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் உதவிப்பொதுசாப்பு உத்தியோகத்தர் சி.வேலாயுதம் பொறியியலாளர் சி.செல்லச்சாமி) பொறியியலாளர் வி.மகேந்திராடவரை ஞர்கே. சிவலிங்கம் ஆகியோருக்குதங்கவிருதுவழங்கப்பட்டது.

— ரூபா 12275 - 8 X 325 - 15,325/-
[மாதமொன்றிற்கு]

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 2
— ரூபா 10650 - 5 X 325 - 12,275/-
[மாதமொன்றிற்கு]

விரிவுரையாளர் (தகுதிகாண்)
— ரூபா 6050 - 10 X 250 - 8550/-
(மாதமொன்றிற்கு)

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
— ரூபா 5270/- மாதமொன்றிற்கு
[நிலையானது]

தற்காலிக உதவி விரிவுரையாளர்
— 1993-12-31ஆம் திகதி வரை
ரூபா 4585/- [நிலையானது]
மாதமொன்றிற்கு.
1994-01-01இல் இருந்து ரூபா 5,270/-
[நிலையானது] மாதமொன்றிற்கு

★★ தற்காலிகச் செய்முறை காட்டுனர்
— 1993-12-31ஆம் திகதிவரை
ரூபா 3835/- [நிலையானது]
மாதமொன்றிற்கு.
— 1994-01-01இல் இருந்து
ரூபா 4,420/- [நிலையானது]
மாதமொன்றிற்கு

★★ பரீட்சைப்பெறுபேறுகளுக்காகக்காத்திருப்போர் அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3,660/- [நிலையானது] மாதச் சம்பளத்தில் 1993-12-31 வரை வைக்கப்படுவர், 1994-01-01 தொடக்கம் ரூபா 4100/- [நிலையானது] மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.

குறிப்பு:

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 579ஆம் இலக்க, 1993 ஆகஸ்ட் 3ஆந் தேதியச் சுற்று நிருபத்திற்கு ஏற்ப நிரந்தர ஊழியர்களிற்கான மேற் குறித்த சம்பள அளவுத் திட்டங்கள் 1994 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.

இத்துடன் 1994 டிசம்பர் 31ஆம் திகதிவரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற் குறித்த சம்பளத்தின் 25 வீதம் நிரந்தர, தற்காலிகப் பணியாளர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படும்.

9/93ஆம் இலக்க 1993-05-12ஆந் தேதியப் பொது நிர்வாகச் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின்படி மாதாந்தப் படியாக ரூபா 600/- கொடுப்பனவு செய்யப்படும்.

இத்துடன் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- புத்தகப்படி செலுத்தப்படும் இப்படியானது ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப்பணமாகச் செலுத்தப்படும். 1994-01-01 தொடக்கம் செலுத்தப்படும் படி ஆண்டுக்கு ரூபா 10,000/-ம் அத்துடன் ஆண்டுச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான படியினதும் 10 வீதம் ஆகும்.

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்விற்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களும் தற்காலிகப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993. 12. 31. இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1993. 10. 31.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களையும் விபரங்களையும் ஒவ்வொருவிண்ணப்பப் படிவத்திற்கும் நிதிக்கிளையில் ரூபா 20/-ஐச் செலுத்திய பின்னர் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள். நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993.09.08

(இ-7398)

திகதி தொழுநோய் குறித்த சுகாதாரக் கல்விக் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளனர்.

இப்பகுதியில் இரண்டு தொழுநோயாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்தே அப்பகுதியில் மேற்படி சுகாதார கருத்தரங்கை நடத்தவுள்ளதாகவும் அதைத் தொடர்ந்து தொழுநோய் ஆய்வு ஒன்றை நடத்தவுள்ளதாகவும் யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற வாராந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சுகாதாரக் கல்வி குடாக்கள் ஆரம்ப சிறுவர் பாடசாலையில் நடைபெறவுள்ளது. இதில் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை தொழுநோய் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் குணரட்ணமும் கலந்துகொள்ளவுள்ளார். [சி]

## சுகாதார பரிசோதகர்களுக்கு 3நாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சுகாதார பரிசோதகர்களுக்கு மூன்று நாள் பயிற்சி ஒன்றை தாதிகள் பயிற்சிக்கல்லூரியில் வரும் 13ஆம் திகதியும் 20ஆம் திகதியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் நடத்தவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறி இதுவரை குடும்பநல சேவையாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டு வந்தது இம்முறையே சுகாதார பரிசோதகர்களுக்கும் இப்பயிற்சியை வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டது 13ஆம்திகதி தொடக்கம் 16ஆம் திகதிவரை ஒருகுழுவுக்கும் 20ஆம்திகதிமுதல் 23ஆம்திகதி வரை ஒரு குழுவுக்குமாக இரண்டு குழுக்களாக பிரித்து இப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகிறது. (சி)


## மலிவு விற்பனை

வீட்டுப் பாவனைக்குரிய பாய், பெட்டி, சுளகு, போன்ற சகலவிதமான கைப்பணிப் பொருட்களும், விசேட விலைக் கழிவுடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. தெரிவுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

காலம் 10. 09. 93 முதல் 20. 09. 93 வரை.

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
சந்தைப்படுத்தும் பிரிவு,
220, ஸ்ரான்லி வீதி,
(சி-7402) யாழ்ப்பாணம்.



LIONS INTERNATIONAL
We Serve

## யாழ். லயன்ஸ் கழகம் அறிவித்தல்

எம்மால் நடத்தப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 12-ம் திகதி ஞாயிறன்று யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அன்பர்கள், ஆதரவாளர் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

★ எம்மிடம் மூக்குக்கண்ணாடிக்கு விண்ணப்பித்தவர்களை இன்று சமுகம் அளிக்க வேண்டுகின்றோம்.

(5948)

- தலைவர்

## 6-ம் ஆண்டு நினைவுநாள்



மலர்வு:
28-11-1965

வீரச்சாவு:
12-09-1987

### வீரவேங்கை இராஜேந்தர்

[ஜெகதீசன் பகீரதன்]
[காங்கேசன்துறை]

நாட்டைக்காக்கச் சென்ற நல்லதொரு தலைவனுடன்
நானும் ஒருவன் என்று நாடிச் சென்ற வீரனுனை
ஆயுதத்தைக் கையளித்து ஆறுநாட்கள் ஆகுமுன்னே
அமைதிப்படையின் அரவணைப்பில் ஆடிப்பாடிய
அறிவிலிகள்
அருட்செல்வம் உனை அழித்த ஆணவத்தின் பிறப்புகளை
அகற்றிவிட்டு ஆள்வதற்கு அமைதியுடன் உன் நிழல்கள்
ஆற்றிவரும் போர்த்திறனால் ஆகும் வெற்றி
விரைவில் உண்டு
அமைதியுடன் வாழ்வோம் என்று அறுதியிட்டுக்
கூறுகின்றோம்

பாரதி வீதி, குடும்பத்தினர்,
மானிப்பாய். உறவினர், நண்பர்கள்,

(5940)

## 30ஆம்நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
15-03 1927

மறைவு:
14-08-1993

### திருமதி தம்பு நாகம்மா

எமக்கு நல்வழிகாட்டி நெறிப்படுத்தி உருவாக்கிய அன்னை இன்று எம்முன்னிலையில் இல்லை. இருப்பினும் அவரது திருமுகத்தை இங்கு காணும்போது அவரே எம் முன்னிலையில் வந்தது போன்ற உணர்வு எமக்கு வருகிறது. எல்லா வழிகளிலும் அவரது ஆன்ம ஈடேற் ...

### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

ஊனமுற்றோர்புனர்வாழ்வு நிதிக்காக யாழ். லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணியளவில யாழ். இந்துமகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

## தனியார் மருத்துவ நிலையங்கள் கட்டுப்படுத்தச் சட்டம்

(கொழும்பு)

தனியார் மருத்துவ நிலையங்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் வகைசெய்யும் மசோதா ஒன்றை சுகாதாரம் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார்.

தனியார் மருத்துவ நிலையங்களால் வழங்கப்படும் மருத்துவச் சேவை தரக்குறைவாக இருப்பதால் இந்த மசோதா நிறைவேற்றப்படவுள்ளதாக அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

பொது மக்களிடமிருந்து தனியார் மருத்துவ நிலையங்களுக்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே தனியார் மருத்துவ நிலையங்கள் (விதிகள்) சட்டம் என்ற பெயரில் இந்த மசோதா பாராளுமன்றத்தில் முன்மொழியப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுச்சபை ஒன்றும் நிறுவப்படவுள்ளது. இந்தச் சபை ஓர் ஆலோசனைச் சபையாகச் செயற்படும். சபையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட மருத்துவ துறைசார் சங்கங்களின் பிரதிநிதிகளும் இடம் பெறுவர்.

மக்களுக்குத் தரமான மருத்துவ சேவையை வழங்கவும் மருத்துவ நிலையங்களின் தரத்தைப் பேணவுமே இந்த மசோதா கொண்டுவரப்படவுள்ளது.

### பத்திரிகைக் கலை கற்கைநெறி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் ஆரம்பிக்கப்பட உள்ள பத்திரிகைக் கற்கை நெறி தொடர்பான பயிற்சி நெறி 18-9-93 பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

இப்பயிற்சி நெறியை தொடர உள்ளோர்க்கான பதிவு வேலைகள் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நடைபெற உள்ளதாக இதன் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். சுமார் ஆறு வாரங்கள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற உள்ள இவ்விரிவுரையில் எண்பது வீத வகுப்புக்களுக்கு சமுகம் கொடுப்போருக்கு பயிற்சி நெறி முடிவில் பங்குபற்றுநர் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

(17)

### மாட்டுவண்டி சவாரிப் போட்டி

சங்குவேலி சனசமூக நிலையத்தின் ஆதரவில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கந்தரோடை மாட்டு வண்டிச் சவாரித் திடலில் நடைபெறும்

### மணிவிழா

(சுன்னாகம்)

தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தினரால் இலக்கிய வித்தகர் திரு. அநு வை. நாகராஜனின் மணிவிழா இன்று ஞாயிறு காலை 9 00 மணிக்கு இணுவில் மத்திய ...

## 31 -ம் நாள் கண்ணீர் அஞ்சலி



### திரு. இ. சின்னத்தம்பி

(தம்பிபிள்ளை வாத்தியார்)

இளைப்பாறிய ஆசிரியர், பதில் அதிபர், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி

தோற்றம்: 28-11-1917 | மறைவு: 11-8-1993

திதி: 12-9-1993

11-8-93 புதன்கிழமை நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட சகலருக்கும் இன்று நடைபெறும் அந்தியேட்டி வைபவங்களில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றி.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்,

அரசடி, மக்கள், மருமக்கள்,
முத்த நயினார் கோவிலடி, பேரப்பிள்ளைகள்.
கரணவாய்

## பனைவெல்லம் - பனங்சீனி உற்பத்திக்கு பயிற்சி

தமிழீழத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் பனை வெல்லம், பனஞ்சீனி ஆகியவற்றினது தரத்தினையும் உற்பத்தியினையும் மேம்படுத்தும் வகையில் பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்குவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் திட்டமிட்டுள்ளனர்.

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கே இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழில் பகுதியின் தொழில்துறை மேம்பாட்டு நிறுவன பணிமனையில் முதல் 5 நாட்கள் பயிற்சிக் கருத்தரங்கும், மிகுதி 2 நாட்களும் அச்சுவேலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் வல்லை உற்பத்தி நிலையத்தில் செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

## கல்வியியல் கல்லூரியில் கற்போருக்குச் சலுகை

[கொழும்பு]

கல்வியியல் கல்லூரிகளில் கற்கும் ஆசிரியர்கள் அந்தக் கற்கை நெறியை முடிக்கும் வரை வேறு பரீட்சைகளுக்குத் தோற்றக் கூடாது என்ற விதியை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி உயர்கல்வி, கல்வி மற்றும் கலாசார அமைச்சர் ஜே. எம். லொக்குபண்டாரா பணித்துள்ளார்.

ஒன்பது கல்வியியல் கல்லூரி அதிபர்கள் மற்றும் 14 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்கள் அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்விளைவே இந்த முடிவு. கல்வியியல் கல்லூரி மற்றும் ஆசிரியர் கல்லூரிகளில் கற்கும் ஆசிரியர்களை வேறு பரீட்சைகளுக்குத் தோற்ற அனுமதி மறுக்கும் சுற்றுநிருபத்தை மீளப் பெறுமாறு கல்வி ராஜாங்க செயலாளர் ஏ. ஆர். ரி. அலைச அமைச்சர் கேட்டுள்ளார்.

மேலதிகக் கல்வித் தகைமைகளைப் பெறும் ஆசிரியர்களுக்கு அமைச்சர் பணிப்புக்குப் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வுகளும் வழங்குவதெனவும் இந்தச் சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சி பெறும் ஆசிரியர்களின் ஆங்கிலமொழி தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் அதிபர்களைக் கேட்டுக் கொண்டார்.

மாணவர்களின் ஆங்கில மொழி அறிவு குறைவாக இருப்பதால் அவர்கள் தனியார் துறையிலும் வேலை வாய்ப்புப் பெறுவதில் சிரமப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### பரிசளிப்பு விழா

யா அல்லாரை அ.த.க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா 13.9.93 திங்கள் கிழமை பி.பகல் 2மணிக்குவித்தியாலயத்தில் அதிபர்.செல்வி தி.வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில்இடம்பெறும்]86

## ஆண்டொன்றின் நீங்காத நினைவலைகள்



அன்னையின் மடியில்
03-12-1973

மண்ணின் மடியில்
12-09 1992



தோற்றம்:
15-03 1927

மறைவு:
14-08-1993

## திருமதி தம்பு நாகம்மா

எமக்கு நல்வழிகாட்டி நெறிப்படுத்தி உருவாக்கிய அன்னை இன்று எம்முன்னிலையில் இல்லை. இருப்பினும் அவரது திருமுகத்தை இங்கு காணும்போது அவரே எம் முன்னிலையில் வந்தது போன்ற உணர்வு எமக்கு வருகிறது. எல்லா வழிகளிலும் அவரது ஆன்ம ஈடேற்றத்தை நாடிநிற்கிறோம்.

கணவர், மகன், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
சகோதரர், பெறாமக்கள்.

சண்டிவீதி,
கொடிகாமம்.

(சி-7407)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மணலாற்றில் நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

### வீரவேங்கை சியோ

(தர்மலிங்கம் நந்தினி)

தாயின் மடியில்: 28-06-1974
தாயக மண்ணில்: 12-09-1991

தாயக விடிவுக்காய் நடக்கும் தியாக வேள்வியிலே உயிரையே ஆகுதி சொரிந்த எம் ஆருயிரே உனக்கும் உன்னோடு உடன் வந்து காற்றோடு காற்றாகக் கலந்து விட்ட ஏனைய மாவீரர்கட்கும் "வெள்ள நீர் வேலை தன்னில் வீழ்ந்த நீர்வீழ வெங்கண் உள்ள நீர் எல்லாம் மாறி உதிர நீர் சொரிய நின்று" அஞ்சலிக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

மலையாளம் தோட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(4945)

---

(தம்பிப்பிள்ளை வாத்தியார்)

இளைப்பாறிய ஆசிரியர், பதில் அதிபர், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி

தோற்றம்: 28-11-1917
மறைவு: 11-8-1993

திதி: 12-9-1993

11-8-93 புதன்கிழமை நடைபெற்ற அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட சகலருக்கும் இன்று நடைபெறும் அந்தியேட்டி வைபவங்களில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றி.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்,


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அரசடி,
மூத்த நயினார் கோவிலடி,
கரணவாய்
கரவெட்டி.

(5914)

---

## 1-ம் ஆண்டு நினைவு நாள்





திருமதி

### ஞானமுத்து மேரிப்பிள்ளை

மலர்வு: 06. 02. 1925
உதிர்வு: 12. 09. 1992

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதலின்று"

என்ற குறளுக்கேற்ப வாசலில் வந்தோருக்கும் விருந்தளித்து எதுவித குறையுமின்றி வாழ்ந்து வந்தார். எந்த நேரமும் இலட்சுமீகரமும், சிரித்த முகமும் இவரது இயற்கைத் தோற்றமாகும். இதனால் இவர் எல்லோர் இதயங்களிலும் சிரித்துக் கொண்டேயிருக்கிறார்.

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

இவரது பிரிவால் துயருறும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனிமார்,
மைத்துனர்கள்.

பெரியவிளான்,
இளவாலை.

[5933]

---

வில் பங்குபற்றுநர் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

(17)

### மாட்டுவண்டி சவாரிப் போட்டி

சங்குவேலி சனசமூக நிலையத்தின் ஆதரவில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கந்தரோடை மாட்டு வண்டிச் சவாரித் திடலில் நடைபெறும்

### மணிவிழா

(சுன்னாகம்)

தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தினரால் இலக்கிய வித்தகர் திரு. அநு வை. நாகராஜனின் மணிவிழா இன்று ஞாயிறு காலை 9 00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இம்மணிவிழாவில் வரவேற்புரையைத் திருமதி கோகிலா மகேந்திரனும், தலைமையுரையை சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும், வாழ்த்துரையை பண்டிதை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் வழங்கவுள்ளனர்.

பணி ஏட்டின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் வழங்குவார். திரு, டொமினிக் ஜீவா, திரு. ஏ. ரி பொன்னுத்துரை ஆகியோர் பாராட்டுரைகளை வழங்குவார். நன்றியுரையை பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் வழங்குவார்

[11]

### குடிசைகள் அமைப்பு

[வடமராட்சி]

வலிகாமம் பகுதிகளில் இருந்து நிரந்தர குடியிருப்புக்கள் இல்லாத நிலையில் பருத்தித்துறை பிரதேசச் செயலர் பிரிவில் தங்கிவரும் குடும்பங்களுக்கு வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 40 குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

மேலும் அகதிகள் தங்கிவரும் 27 குடிசைகள் புனரமைப்புச் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

[யோ]

### தையல் நிலையம் திறப்பு

(தென்மராட்சி)

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் மீசாலை கிளையில 1993-ம்ஆண்டு தையல் பயிற்சி பெற்று தெரிவாகிய யுவதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கம் மீசாலையில் தையல் நிலையம் ஒன்றை திறந்து வைத்துள்ளது.

(86)

---

## ஆண்டொன்றின் நீங்காத நினைவலைகள்



அன்னையின் மடியில்
03-12-1973

மண்ணின் மடியில்
12-09 1992

### பாண்டியன்

இரத்தினசிங்கம் விருஜசின் இதயராஜ்

பெரியவிளான் இளவாலை

ஆண்டொன்றில் எம்மை ஆழாத்துயரிலாழ்த்தி
மீளாத்துயில் கொண்டிருக்கும் எம்மினிய பாண்டியா
பாசமிகு பெற்றோர் சோதரரை மறந்து
மண்மீட்கச் சென்றாய் ஆனால் உன் சுகயீனம்
உன்னை மீண்டும் மீண்டும் வீட்டிற்கு அனுப்பியது.
நீ அறவில்லை ஓயவில்லை உதவிக்கரம் நீட்டி நின்றாய்
ஆனால் ஆனைக்கோட்டை மண்பிட்டி உனக்கு
எமனாய்மாறியது
உன் ஆன்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.


-நண்பர்கள்

இணுவில்வீதி,
மானிப்பாய்

(5949)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
8 - 6- 1935

மறைவு:
12-8-1993

### திரு. சின்னத்தம்பி மகேந்திரன்

[திருநெல்வேலி]

எட்டாண்டு உம்மோடு பணிபுரிந்தேன்
இதயமதை மறந்திட மறுக்கிறது
மனிதராக நீர் வாழ்ந்ததனால்,

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்,

சிந்துஜா அரைக்கும் ஆலை, உங்கள் பணியாளன்.

கொக்குவில். (சி-7410) இ. ஸ்ரீதரன்

### சிந்தனைக்கு

எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழையாக இருந்தால் சரி என்று எண்ணுவாரைப் போல...

—தமிழ்ப்பழமொழி


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2025
த. பெ. எண்-05


## பேரினவாதத்தின் மற்றுமொரு விருப்பு

"மேற்கு நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகங்களை மூடுமாறு அவற்றின் அரசாங்கங்களை வெளியுறவு அமைச்சர் கோரவேண்டும். அவ்வாறு கேட்க முடியாது போனால், ஐரிஸ் குடியரசு கெரிலாக்களின் அலுவலகம் ஒன்றை கொழும்பில் திறக்குமாறு அவ் இயக்கத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் என நான் கோருவேன்" எனச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் திலக் கருணாரட்ணா பாராளுமன்றத்தில் விடுத்த கோரிக்கையானது இலங்கையில் மட்டுமல்ல, உலகின் எப்பகுதியிலும் தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்று விடக்கூடாது என்ற இனவெறியின் வெளிப்பாடாகும்.

மேற்கு நாடுகள் பலவற்றில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கிளைகள் இயங்குவதும், தமிழ் மக்களின் விடுதலைக்காக முன் முயற்சிகளை அவை மேற்கொள்வதும் சகலருக்கும் தெரியும். இவை ஒன்றும் அந்நாடுகளில் இரகசியமாகச் செயற்படவில்லை. பகிரங்கமாகவே முகவரியுடனும் தொலைபேசித் தொடர்புகளுடனுமே இயங்குகின்றன.

ஆகையினால், இவ் அமைப்புக்களுக்கு அந்நாட்டு அரசாங்கங்கள் இயங்குவதற்கான உரிமையை அளித்துள்ளன என்பதே பொருளாகும். இதனால், இவ் அமைப்புக்கள் அங்கு சட்டபூர்வமானவை. அந்நாட்டின் விதிகளுக்கு உட்பட்டு இயங்குகின்றன என்பதுமே சரியாகும்.

இதுகுறித்து முன்னரும் ஒரு தடவை பிரிட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பு வந்த போதும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், அவர் வெளிப்படையாகவே இவ் அமைப்புக்கள் சட்ட விதிகளுக்கு உட்பட்டு இயங்குவதினால் நடவடிக்கை ஏதும் எடுக்கமுடியாது என விளக்கம் அளித்திருந்தார்.

இதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. அறிந்திருந்தாரோ இல்லையோ ஆனால், மேற்குலகில் தமிழர் பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் பற்றி அவர் கொதித்துப் போயுள்ளார். தமது நாட்டில் சொந்த பிரஜைக்கு இல்லாத உரிமை

# அல்லலுறும் பட்டதாரி மாணவர்களுக்கு

# ஒரு வாழ் தொழில் வழிகாட்டல் மையம்

### யாழ். பல்கலைக்கழகத்தில் அறிமுகம்

இலங்கையில் பல தசாப்தங்களாக கடைபிடிக்கபட்டுவரும் சமூகநலசெயற்பாட்டினாலும் மக்கள் தொகை அதிகரிப்பு, இலவசக் கல்வி, தாய்மொழி மூலம் பாடப்போதனை போன்றவற்றாலும் முதலாம் இரண்டாம் நிலை கல்வி கற்போரின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனைத்தொடர்ந்து மூன்றாம் நிலை கல்விக்கும் கேள்வி அதிகரித்தது. பல்கலைக்கழக புகுமுகத் தேர்விற்கு (க.பொ.த உயர்தரம்) தோற்றும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 28 சதவீத மாணவர்களே பல்கலைக்கழகம் புகுவதற்கான தகுதியை பெறுகின்றனர். இவர்களில் ஏறத்தாழ 13 சதவீதமானவர்கள் மட்டுமே இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறுகின்றனர். பல்கலைக்கழக அனுமதிபெறுகின்றவர்கள் பல்கலைக்கழக புகுமுக பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் அல்லது இரண்டாம் நிலை கல்வி கற்பவர்களில் 6 சதவீதமாக மட்டுமே காணப்படுகின்றனர். இது உலகிலேயே மிகவும் குறைந்த ஒரு வீதமாகும். கடந்த சில வருடங்களாக மூன்றாம் நிலை கல்வி பெறுபவர்களது எண்ணிக்கையை உயர்த்தும் நோக்குடன் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும், பல்கலைக்கழகக் கல்லூரிகளையும், பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பிற்கான சந்தர்ப்பங்களையும், தொலைக்கல்வி மூலம் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகளையும் உயர்த்தி இருப்பதைக் காணலாம்.

மூன்றாம் நிலைக் கல்விக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்க உயர்கல்வித் தகைமைகளைக் கொண்டவர்களது எண்ணிக்கையும் அதிகரிக்கும். இவ்வாறு உயர்கல்வி தகைமையுடன் அதிகரிக்கின்ற வேலைப்படையை உறிஞ்சக்கூடிய வகையில் பொருளாதார வளர்ச்சி காணப்படும் போது வேலையின்மை நெருக்கடிகள் தோன்ற இடமில்லை. ஆனால் அதிகரிக்கும் வேலைப்படையை உறிஞ்சக்கூடியவாறு பொருளாதாரச் செழிப்பு, முன்னேற்றம் ஏற்படவில்லையானால் வேலையின்மை பிரச்சினை உருவாகும். அதுமட்டுமல்ல மன் நாட்டின் பாடசாலை பல்கலைக்கழகங்களின் கற்கைநெறிகளுக்கும், பாடப்போதனைகளுக்கும் வேலைவாய்ப்புசந்தர்பங்களுக்கும் இடையில் இசைவுறாத்தன்மை காணப்படும் போது ஒரு சில கற்கை நெறிகளை கற்கின்ற மாணவர்கள் தொழில் வாய்ப்பை பெறமுடியாமல் போவதும் சாத்தியமாகும்.

போதியளவு வேலை வாய்ப்புகளை பொருளாதாரம் உருவாக்க தவறும் பட்சத்தில் கிடைக்கும் தொழில் வாய்ப்பிற்கு அதிகரித்த போட்டி காணப்படும் குறிப்பாக தொழில் தகைமை இல்லாத உயர்கல்வி கற்கின்ற மாணவர்கள் இத்தகைய போட்டிக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும். இத்தகைய மாணவர்களில் பெரும்பாலானோர் தொழில் சந்தை பற்றிய தகவல்களை அறிந்திராத காரணத்தினால் போட்டியிட்டு தொழில் வாய்ப்பை பெறும் மனோ நிலையையோ அல்லது போட்டிக்கு தம்மை தயார் படுத்திக் கொள்ளவோ முடியாதிருக்கிறார்கள். இவர்கள் தொழில் திருப்தி இல்லாமல் கிடைக்கின்ற தொழில்களை ஏற்று வாழப்பேசக்கில் சலிப்புடனும், குறைந்த உற்பத்தித்திறனுடனும் தொழிலாற்றுகின்றனர்.

எதிர்கால திசை தெரியாமல் அல்லலுறும் மாணவர்களுக்கு குறிப்பாக பட்டதாரி மாணவர்களுக்கு எதிர்காலம் சிறப்புற, செய்தொழில் திருப்திகாண, தொழில் தேர்வினை ஏற்படுத்த வழிகாட்டும் நோக்குடன் யாழ் பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வாழ் தொழில் வழிகாட்டல் மையம் செயல்படும். அத்துடன் பொருளாதாரத்தில் எத்தகைய தொழில் வாய்ப்புக்கள் வளர்ச்சி பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. இவற்றைப் பெற்றுக்கொள்ள பட்டதாரி மாணவர்கள் எவ்வாறான தொழில் தேர்ச்சிகள் பயிற்சிகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தகவல்களையும் வழிகாட்டல் மையம் வழங்கும். அத்துடன் பட்டதாரி மாணவர்கள் மேலும் தமது தகைமைகளை உயர்த்திக் கொள்ள எத்தகைய வாய்ப்புக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வழிகாட்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கும். பட்டதாரி மாணவர்களை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தொழிலுக்கமர்த்தும் நோக்கம் கொண்ட தனியார் துறை, கூட்டுறவுத்துறை போன்றவற்றிற்கு தேவைப்படும் பட்சத்தில் பொருத்தமானவர்களை தெரிவு செய்ய பட்டதாரிகள் பற்றிய தகவல்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளது. மேலும் அரசதுறையில் தொழில் பெற விரும்பும் பட்டதாரிகள் தோற்றக்கூடிய பரீட்சைகள் பற்றிய தகவல்களையும் தேவைப்படுமிடத்து இப்பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கு வேண்டிய பயிற்சியளிக்கவும் எண்ணியுள்ளது. அத்துடன் பிறரிடம் கைவேற்றி தொழில் செய்ய விரும்பாத சுயதொழிலில் ஆர்வமுள்ள பட்டதாரிகளுக்கும் நாட்டில் சுயதொழில் வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கமளிக்கவும் எண்ணியுள்ளது.

முதல் கட்டமாக வாழ் தொழில் வழிகாட்டல் மையத்தில் இலக்கு குழுமமாக பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள் இருந்த போதும் நாளடைவில் பல்கலைக்கழகம் புக முடியாமல் க.பொ.த. உயர்தர கல்வியுடன் தமது எதிர்காலம் பற்றி தீர்மானமெடுக்க முடியாமல் அல்லல்படும் மாணவர்களுக்கும் ஆலோசனை வழங்கி வழிகாட்டி அனைத்து மக்களுக்கும் சேவையாற்ற எண்ணியுள்ளது.

**இ. நந்தகுமாரன்**
B. A. (Hons) M. A. M..
பொருளியல் சிரேஷ்ட விரிவுரையாளர்
இணைப்பாளர்
வாழ் தொழில் வழிகாட்டல் மையம்

## பா. வி. இயக்கத்துடன் ராஜீய உறவு அமெரிக்கா மீண்டும் ஏற்படுத்தியது

[வாஷிங்டன்]

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான ராஜீயத்துறை உறவுகளை அமெரிக்கா மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை பாலஸ்தீனவிடுதலை அமைப்பு ஏற்றுக் கொண்டிருப்பதால் அதனுடனான தொடர்புகள் மீண்டும் தொடங்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

[illegible] ...றன.

எனினும் பாலஸ்தீனிய - இஸ்ரேலிய உடன்பாடு மேலும் [illegible] குரியதாகும் என்று விபர அதிபர் [illegible] கூறியுள்ளார்.

## நெல்சன் மண்டேலா மீது கிளார்க் குற்றச்சாட்டு

தென் ஆபிரிக்காவில் தோன்றியுள்ள அரசியல் வன்செயல்களுக்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸே முழுக் காரணம் என்று தென் ஆபிரிக்க அதிபர் டி. கிளார்க் குற்றம்சாட்டி [illegible]

நெல்சன்மண்டேலா அவதூறு பரப்பியும், அவமரியாதை செய்யும் பிரசாரம் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தமிழ் இளைஞர் இருவர் தேடப்படுவதாக அறிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை தொடர்பாக யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இந்திரன் என அழைக்கப்படும் செல்லையா சவீந்திரன், கரவெட்டியைச் சேர்ந்த மார்க்கண்டு செல்வராஜா ஆகிய இருவரும் தேடப்படுவதாக கொழும்பு மா அதிபர் ஏர்னெஸ்ட் பெரேரா வானொலி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்திற்குக் காரணமானவர் எனக் கருதப்படும் வீரகுமார் என்பவருடன் இந்த இருவரும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் தேடப்படுபவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பேசித் தொடர்புகளுடனுமே இயங்குகின்றன.

ஆகையினால், இவ் அமைப்புக்களுக்கு அந்நாட்டு அரசாங்கங்கள் இயங்குவதற்கான உரிமையை அளித்துள்ளன என்பதே பொருளாகும். இதனால், இவ் அமைப்புகள் அங்கு சட்டபூர்வமானவை, அந்நாட்டின் விதிகளுக்கு உட்பட்டு இயங்குகின்றன என்பதுமே சரியாகும்.

இதுகுறித்து முன்னரும் ஒரு தடவை பிரிட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொழும்பு வந்த போதும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், அவர் வெளிப்படையாகவே இவ் அமைப்புக்கள் சட்ட விதிகளுக்கு உட்பட்டு இயங்குவதினால் நடவடிக்கை ஏதும் எடுக்கமுடியாது என விளக்கம் அளித்திருந்தார்.

இவனை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. அறிந்திருந்தாரோ இல்லையோ ஆனால், மேற்குலகில் தமிழர் பெற்றுள்ள அடிப்படை உரிமைகள் பற்றி அவர் கொதித்துப்போயுள்ளார். தமது நாட்டில் சொந்த பிரஜைக்கு இல்லாத உரிமைகள், அந்நாட்டில் அகதிகளாகவுமே வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்டமை அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், அந்நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுமாறு கோரும் அளவிற்கு அவரின் பேரினவாத சிந்தனை சென்றுள்ளது. ஆனால், இது சிங்கள அரசியல் வாதிகளைப் பொறுத்து ஆச்சரியப்படத்தக்கதொன்றல்ல.

இதேவேளை, மேற்கு நாடுகளில் விடுதலைப் புலிகளின் கிளைகள் இயங்குவதைத் தடுக்கவும், தமிழர் தேசிய இனப் போராட்டத்திற்கு எதிராகவும் சிறிலங்கா அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டே வருகின்றது. இதில் ஒன்றாக, மேற்கு நாட்டுத் தூதரகங்களில் பிரசாரத்திற்கென தனிப் பிரிவுகளையே ஏற்பாடும் செய்துள்ளது. பல இராஜதந்திர முயற்சிகளையும் கடந்த காலத்தில் மேற்கொண்டும் இருந்தது.

ஆயினும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல், சிறிலங்கா அரசாங்கத்தினால், தமிழர் விடயத்தில் செல்ல முடியவில்லை. மேற்கு நாடுகள் இலங்கைத் தமிழ் அகதிகள் உட்பட உலகின் பல பகுதிகளில் இருந்து சென்ற அகதிகளால் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குகின்ற போதும் கூட, அவ் அரசாங்கங்கள் இவ் விவகாரத்தில் ஒரு அளவிற்கு மேல் செயற்பட முடியவில்லை. அண்மையில் சுவிட்சலாந்தில் இருந்து அகதிகளை வெளியேற்ற அந்நாட்டு அரசாங்கம் எவ்வளவோ முயற்சித்தும் அது முடியாது போனது போலவே, அந்நாட்டில் இயங்கும் அவர்களின் அமைப்புக்களையும் கலைத்து விடுவதென்பது இலகுவானதொன்றல்ல. இந்நிலையில், வெளிநாடுகள் தமிழர் விவகாரத்தில், குறிப்பாக விடுதலைப்புலிகள் தொடர்பாக இவ்வாறுதான் நடந்து கொள்ள வேண்டும் என மேற்குலகை எதிர்பார்ப்பது சிங்கள பேரினவாதிகளுக்கு ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. சிறிலங்காவில், ஐரிஸ் கெரிலாக்களுக்கு தூதுவராலயம் ஒன்று அமைப்பதற்கு அனுமதி அளிக்குமாறு கோருவதற்கு அவருக்கு பூரண சுதந்திரம் உண்டு. ஏனெனில், சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கோர சிறிலங்கா பிரஜை என்ற ரீதியிலும், 'மக்களின் பிரதிநிதி' என்ற ரீதியிலும் அவருக்கு உரிமை உண்டு. அவ்வாறான கோரிக்கை அவர் விடுப்பாரேயானால் அடக்கப்பட்ட மக்களுக்கான கோரிக்கை என்ற ரீதியிலும் தமிழ் மக்களும் அதனை ஆதரிக்கக்கூடும்.

# பா. வி. இயக்கத்துடன் ராஜீய உறவு அமெரிக்கா மீண்டும் ஏற்படுத்தியது

[வாஷிங்டன்]

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான ராஜீய்த்துறை உறவுகளை அமெரிக்கா மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை பாலஸ்தீன விடுதலை அமைப்பு ஏற்றுக் கொண்டிருப்பதால் அதனுடனான தொடர்புகள் மீண்டும் தொடக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் கூறியுள்ளார்.

எனினும் அமெரிக்க பாராளுமென்ட் இயைப்பியுள்ள சில சட்ட ரீதியான பிரச்சினைகளால் பாலஸ்தீன மக்களின் ஒரே பிரதிநிதியான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரிப்பதை அமெரிக்கா இப்போதைக்கு ஒத்தி வைத்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலுடனான ஒப்பந்தத்தை பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் ஆளும் செயற்குழு இந்த ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து பாலஸ்தீனிய தேசிய செயற்குழுவின் மூன்று உறுப்பினர்கள் அதிலிருந்து விலகியுள்ளனர்.

பிரிட்டன், ஜேர்மனி, பெல்ஜியம் போன்ற ஐரோப்பிய நாடுகளும், ஜோர்தானும் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளன.

எனினும் பாலஸ்தீனிய - இஸ்ரேலிய உடன்பாடு கேலிக்குரியதாகும் என்று லிபிய அதிபர் கேணல் முஅம்மர் கடாபி கூறியுள்ளார்.

## நெல்சன் மண்டேலா மீது கிளார்க் குற்றச்சாட்டு

தென் ஆபிரிக்காவில் தோன்றியுள்ள அரசியல் வன்செயல்களுக்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸே முழுக் காரணம் என்று தென் ஆபிரிக்க அதிபர் டி. கிளார்க் குற்றம்சாட்டியுள்ளார்.

கறுப்பு இனத்தவர் கொலை செய்யப்படுவதற்கு தாம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டி ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன்மண்டேலா அவதூறு பரப்பியும், அவமரியாதை செய்யும் பிரசாரம் செய்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜோகானஸ்பேர்க்கில் கடந்த சனிக்கிழமைக்குப் பின் 44 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 31 பேர் இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## அரபாத் வாஷிங்டனுக்கு விஜயம் செய்யக்கூடும்

(வாஷிங்டன்)

இஸ்ரேல் பாலஸ்தீன உடன்பாடு வெள்ளை மாளிகையில் கையெழுத்தாகும் எனவும், இக் கைச்சாத்திடும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் வாஷிங்டனுக்கு விஜயம் செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை இஸ்ரேலிய பிரதமரும் இவ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் மட்டத்தில் உடன்பாடு கைச்சாத்திடப்படுமேயானால் யாசிர் அரபாத் பார்வையாளராக மட்டுமே கலந்து கொள்வாராம். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் ஐந்துபேர் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானோருக்கு இவ் வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பை வெள்ளைமாளிகை அனுப்பியுள்ளது.

## சட்டமன்ற உறுப்பினர் விபத்தில் பலி

மைலாப்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டி.எம். ரங்கராஜன் நேற்று முன்தினம் காஞ்சிபுரம் அருகே கார்விபத்து ஒன்றில் உயிரிழந்தார். ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற இவரது கார் வாகனம் ஒன்றுடன் மோதிஏற்பட்ட விபத்தில் இவருடன் இன்னும் மூவர் உயிரிழந்தனர்.

சில அரச கூடங்களில் செய்யப்படும் பரிசோதனைகள் நம்பத்தக்கதாக இல்லாததால் பல மருத்துவ நிபுணர்கள் பரிசோதனைகளைத் தனியார் ஆய்வு கூடங்களில் செய்யுமாறு ஆலோசனை கூறுகிறார்கள் என்றார் அவர்.

அதே வேளை மருத்துவர்களும் தொழில்நுட்பவியலாளரின் அறிக்கைகளை ஏற்க வேண்டும். தொண்டத்திற்கும் வெளியில் உள்ள தனியார் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பக் கூடாது என்றும் கூறினார்.

## அயோத்தியாவில் நடந்த சம்பவங்களை விசாரிக்க விசேட நீதிமன்றம்

[டில்லி]

உத்தரப் பிரதேசத்தில் டிசம்பர் 6ஆம் திகதியன்று அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய கட்டடம் இடிக்கப்பட்டது தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்கு உத்தரப் பிரதேச அரசு விசேட நீதிமன்றம் ஒன்றை அமைத்துள்ளது. முதனிலை நீதிபதி ஒருவர் இந்த நீதிமன்றத்திற்கு தலைமை வகிப்பார் என்றும், கட்டடம் இடிக்கப்பட்டது தொடர்பான வழக்குகள் மீது இந்நீதிமன்றம் விசாரணை நடத்திவிட்டு பின்னர் அதனை செசன்ஸ் நீதிமன்றங்களுக்கு அனுப்பும் என்றும் லக்னோவில் வெளியிடப்பட்ட அரசாங்க செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரையோரப் பாதுகாப்பை வலுப்படுத்த திட்டமாம்

(சென்னை)

சிதம்பரனார் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான திட்டமொன்று மாநில அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் அமின் வர்மா கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் நேற்று செய்தியாளரிடம் பேசிய அவர், மாவட்டத்தில் புலிகளின் நடமாட்டம் எதுவும் இல்லையென்றாலும் தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் வருவதைத் தடுப்பதற்காக கடுமையான கண்காணிப்பு மேற்கொள்ளப் படுவதாக தெரிவித்தார்.

## தமிழ் இளைஞர் இருவர் தேடப்படுவதாக அறிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை தொடர்பாக யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இந்திரன் என அழைக்கப்படும் செல்லையா சுசீந்திரன், கரவெட்டி வடக்கைச் சேர்ந்த மார்க்கண்டு செல்வராஜா ஆகிய இருவரும் தேடப்படுவதாக பொலிஸ் மா அதிபர் ஏர்னெஸ்ட் பெரேரா வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்திற்குக் காரணமானவர் எனக் கருதப்படும் வீரகுமார் என்பவருடன் இந்த இருவரும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் தேடப்படுபவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தற்கொலை மரணமென விசாரணையில் தீர்ப்பு

[கண்டி]

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் வி.எஸ். சிவராஜனின் (வயது - 80) மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கண்டி மேலதிக திடீர்மரண விசாரணை அதிகாரி ஏ.டி.ஆர். பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

கண்டி டாலிகொல்லிக்கல்ல விரிவுரையாளர் தங்கும் இல்லத்தின் அறையொன்றில் சிவராஜன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

ஆகஸ்ட் 18ஆம் திகதி கிருமிநாசினி அருந்திய சிவராஜனின் சடலம் 22ஆம் திகதி அறையில் கண்டுபிடிக்கப்பட்டது.

கண்டி சட்ட வைத்திய டாக்டர் கே. நடேசன் நடத்திய பிரேத பரிசோதனையின் பின் கிருமிநாசினி அருந்தியதால் சிவராசனின் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளித்துள்ளார்.

பெற்றோருக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் அவர் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த ஐந்து வருடமாகத் தன் கண்பார்வை படிப்படியாகக் குறைந்து வருவதால் தான் தற்கொலை செய்வதாகத் தெரிவித்துள்ளார். சிவராஜன் யாழ்ப்பாணம் கொண்டாவிலைச் சேர்ந்தவராகும்.

## சிறப்பு விழா

உடுவில் பிரிவு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் சுயதொழில் பயிற்சி நிலையமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இணுவில் மத்திய சந்தைக் கட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. புதிய பயிற்சி நிலையத்தை இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளைத் தலைவர் திரு.சிங்கராயர் திறந்துவைப்பார். உதவி அரச அதிபர் ஆ.மகாலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். [09]

## மக்கள் வங்கி ஊழியருக்கு மட்டுமே சலுகை பொருந்தும்

மக்கள் வங்கியில் கடமையாற்றி இளைப்பாறிய ஊழியர்களுக்கு மட்டுமே 75 சதவிதப் பணத்தை ஓய்வூதிய முற்பணமாக வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாக யாழ்ப்பாணப் பிராந்திய மக்கள் வங்கி வட்டாரங்களில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய வவுச்சர்கள் தாமதமாகும் காலத்தில் வழங்கப்பட இருக்கும் இச்சலுகை மக்கள் வங்கியில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஏர் இருக்க பயம் ஏது?**

ஈழநாதம்

## மணவாளக் கோலம்

வீரமு-சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தான மணவாளக்கோலம் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்நபன அபிஷேகமும் திருஊஞ்சல் வைபவமும் நடைபெறவுள்ளது. கிரியைகள் யாவும் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. பா. வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

## புதுடில்லி இளைஞர் காங்கிரஸ் செயலகம் அருகே குண்டுவெடிப்பு

### 8 பேர் பலி; 35 பேர் படுகாயம்

(டில்லி)

புதுடில்லியில் நேற்று ஏற்பட்ட குண்டு வெடிப்பில் எட்டுப் பேர் உயிரிழந்தனர். இந்தியதேசியஇளைஞர் காங்கிரஸ் தலைவர் மணிந்திரசிங்பித்தா இலேசான காயங்களுடன் உயிர் தப்பினார்.

இளைஞர் காங்கிரஸ் தலைமையகத்தில் அவர் கட்சித் தொண்டர்களுடன் பேசிவிட்டு வெளியேறிய போது சக்தி வாய்ந்த இரு குண்டுகள் வெடித்தன, எட்டுப்பேர் உயிரிழந்ததுடன் முப்பத்தைந்து பேருக்குக் காயம் ஏற்பட்டது. பத்துப் பேர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர் காங்கிரஸ் தலைவருக்கு மெய்ப்பாதுகாவலானாக இருந்த இந்திய-திபெத் எல்லைப்படையின் கொமாண்டோக்கள் இருவர் கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். வேறு சில மெய்ப்பாதுகாவலர்களுக்கும் பாரிய காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிற்பகல் 2. 30 மணியளவில் இந்தக்குண்டுகள் தொலைவிலிருந்து இயக்கி வெடிக்க வைக்கப்பட்டதாகவும் சம்பவம் நடந்தஇடத்துக்கு அருகே தொலைவிலிருந்து இயக்கக் கூடிய கருவி ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 6 கார்கள், 5 ஸ்கூட்டர்கள், 3 சைக்கிள்கள் ஒரு மோட்டார் சைக்கிள் எரிந்து சாம்பராகின.

இந்தக் குண்டு இளைஞர் காங்கிரஸ் கட்டடத்திற்கு வெளியே வைக்கப்பட்டதா அல்லது வாகனத்தில் வைக்கப்பட்டதா என்பது பற்றித் தெளிவாகத் தெரியவில்லை எனவும் தெரியவருகிறது.

இளைஞர் காங்கிரஸ் கட்டடத்துக்கு அருகில் இருக்கும் ஜகவர் பவனியும், வேறு சில கட்டடங்களிலும் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. குண்டு வெடிச் சத்தம் ஐந்து ஆறு கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பாலும் கேட்டது.

காயப்பட்டவர்கள் அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்சில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

## பாலர் பாடசாலை ஆசியர் பயிற்சி

யாழ். மாநகரசபை எல்லையினுள் இயங்கிவரும் சனசமூக நிலையங்களில் பாலர் பாடசாலை ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களில் இதுவரை பயிற்சியைப் பெறாதவர்களின் பெயர் விபரங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர்களுக்கான பயிற்சியை யாழ் மாநகரசபை விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் யாழ் மாநகர சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. ரகுமான் நேற்றைய தினம் யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார். (17)

## தமிழக அரசியல் வாதி உதவியுடன் கமராவை பெறமுயன்றனர்

### ராஜீவ் கொலை வழக்கில் வாதம்

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட மறுநாள் ஹரிபாபுவின் கமராவை மீட்பதற்காக புகைப்படப்பிடிப்பாளர் 'சுபா' சுந்தரம் உயர்மட்ட அரசியல் வாதி ஒருவரின் உதவியை நாடியிருக்கிறார் என ராஜீவ் கொலை வழக்கை விசாரித்து வரும் சிறப்பு நீதிமன்ற நீதிபதியிடம் அரசுதரப்பு வழக்கறிஞர் டாண்டே குறிப்பிட்டார்

மேலும் அவர் கூறுகையில், மேற்படி சம்பவத்தின்போது அங்கு நின்ற மற்றொரு படப்பிடிப்பாளர் மூலம் ஹரிபாபுவின் கமராவை மீட்க மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்தே மேற்படி கமராவை மீட்டுத் தரும்படி ராஜீவ்காந்தியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட தமிழக அரசியல்வாதியிடம் சுபா சுந்தரம் கேட்டுக்கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஹரிபாபுவின் கமராவில் பதிவாகிய புகைப்படங்களின் மூலம் தான் மேற்படி கொலை தொடர்பான பல தடயங்கள் சிக்கிக்கொண்டன.

ஹரிபாபு மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டதுடன் கமராவை பொலிசார் கைப்பற்றிக் கொண்டனர்.

மேற்படி கமராவை மீட்பதற்காக சுபா சுந்தரம் இரு தினங்கள் முயற்சி செய்துள்ளார். கமராவை மீட்டுத் தரும்படி பொலிசாரிடமும் சுபா சுந்தரம் கேட்டுள்ளார். மேலும் ஹரிபாபுவை ராஜீவ் காந்தியின் கூட்டத்தைப் படமெடுப்பதற்காக மட்டுமே அனுப்பினேன் என்று சுபா சுந்தரம் கூறியுள்ளார். ஆனால் சில தினங்கள் கழித்து ஹரிபாபுவை ஸ்ரீபெரும்புதூருக்கு நான் அனுப்பவில்லையென்று சுபாசுந்தரம் முன்னுக்குப்பின் முரணாகக் கூறியுள்ளார். ராஜீவின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட தமிழக அரசியல் வாதி சென்னைக்கு திரும்பியதும் சுபா சுந்தரம் அவருடன் தொடர்புகொண்டதாகவும் சுபா சுந்தரத்தின் முரண்பாடான கருத்துக்களைக் கேட்டு வியப்புத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது. பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மற்றொரு புகைப்படக்காரருடன் தொடர்பு கொண்ட சுபா சுந்தரம் ஹரிபாபு என்ன ஆனார் என்று கேட்டதுடன் அவரது உடல் மீதிருந்த கமராவை ஏன் எடுத்துவரவில்லையென்றும் சுபாசுந்தரம் கேட்டுள்ளார். மேலும் சுபா சுந்தரத்துக்கு ஹரிபாபுவின் தந்தையைத் தெரிந்திருந்தும் ஹரிபாபுவின் மரணம் குறித்து அவரது தந்தைக்கு தெரிவிக்கவில்லை. ஆனால் ஒரு நாள் கழித்துத்தான் ஹரிபாபுவின் மரணம் குறித்து அவரதுகுடும்பத்தினர் செய்தித்தாளில் படித்துத்தான் அறிந்து கொண்டனர். அதேவேளை ஸ்ரீபெரும்புத்தூர் கூட்டத்திற்குச் செல்வதற்கு முன்னர் சுபாசுந்தரம் ஹரிபாபுவைச் சந்தித்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

அத்துடன் கொலை நடந்த மறுநாள் ஹரிபாபுவின் சடலத்தை மருத்துவ மனையிலிருந்து உடனடியாக மீட்பதற்கு சுந்தரத்தை அணுகும்படி பேரறிவாளனுக்கு சிவராசன் கூறியிருக்கிறார்.

மேலும் ஹரிபாவுக்கும் விடுதலைபுலிகளுக்கும் தொடர்பு இருப்பதாக ஓர் ஆங்கிலப்பத்திரிகையில் செய்தி வெளியாகியதைத் தொடர்ந்து அவசர அவசரமாக ஹரிபாபுவின் தந்தையை அழைத்து அதற்கு மறுப்பு அறிக்கை வெளியிடும்படி சுபா சுந்தரம் கூறியிருக்கிறார். இந்த மறுப்பு அறிக்கையைசுந்தரமே ''டிக்டேட்'' செய்து தனது புகைப்பட நிலைய உதவியாளர் மூலம் பத்திரிகைகளுக்கு விநியோகித்துள்ளார் என்றார்.

## பொதுசன உதவிப் பணம் வழங்கல்

(தென்மராட்சி)

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்திலும் உப அஞ்சல் அலுவலகங்களிலும் மாதாந்த பொதுசன உதவிப்பணத்தினைப் பெறுவோர் ஆடி மாதத்திற்குரிய உதவிப்பணக்கொடுப்பனவுகள் மேற்படி அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர்கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு அஞ்சல் அதிபர் கேட்டுள்ளார்.

## பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் பாடசாலைமட்ட வாழ்க்கைத் திறன் பொருட்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் பிற்பகல் 2 30 மணி வரைமேற்படி பாடசாலை தற்போது இயங்கிவரும் பூ. னிவேர்சக் கல்வி நிலையத்தில் நடைபெறும். (22)

## சமாதானப்படை வீரரை பாதுகாக்க பொது மக்கள் மீதும் தாக்குவோம்

### ஐ. நா. இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பு

(ஜெனிவா)

ஐக்கியநாடுகள் சமாதானப் படையின் வீரர்கள் பாதுகாக்கப்படுவதற்காக சோமாலியப் பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்தவும் தயங்கப்போவதில்லையென சமாதானப் படையின் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள்சபை படை வீரர்களை சுற்றிவளைத்த பொதுமக்கள் மீது அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தியதில் 100 சோமாலியர்கள் கொல்லப்பட்டது குறித்தே அவர்கள் இக் கருத்தை வெளியிட்டனர்

இதற்கிடையே சோமாலியா சம்பந்தமான அமெரிக்க ஜனாதிபதியின் கொள்கைபற்றி விளக்கம் அளிக்கும்படி அமெரிக்க செனட்சபை பில் கிளிங்டனை வற்புறுத்தியுள்ளது. சோமாலியா பொதுமக்கள் ஐக்கிய நாடுகள் சமாதானப்படையினரால் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவும் அமெரிக்க செனட்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது

சோமாலியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் படையினரின் இறுதி இலட்சியம் எது? என்பது குறித்து தெரிவிக்கவேண்டும் எனவும் செனட்சபை கிளிங்டனை வற்புறுத்தியுள்ளது

இதனிடையே கடந்த வியாழக்கிழமை சோமாலியாவில் அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் நடாத்திய தாக்குதலில் பெண்களும், சிறுவர்களும் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா வருத்தம் தெரிவித்துள்ளது

## தலைமைத்துவ பயிற்சி நெறி

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்பு அலகினால் நடாத்தப்பட உள்ள தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி மாதாமாதம் நடாத்தப்பட உள்ளதாகவும் இம்மாதாந்தம் நூறுபேர் வரை பயிற்சிபெற சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகவும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கந்தசாமி அவர்கள் நேற்று யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தில் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## யாத்திரைப் போராட்டம் பாரதீயஜனதா நடாத்துகிறது

அரசியலில் மதம் கலப்பதை தடுக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று பாரதிய ஜனதாக் கட்சியாத்திரைப்போராட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

பாரதீய ஜனதாவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நான்கு யாத்திரை...

...யில் ஜம்மு நகரிலிருந்து ஓர் அணியும், மேற்கு பகுதியில் காந்தி பிறந்த ஊரிலிருந்து ஓர் அணி. கிழக்கில் கல்கத்தாவில் இருந்து ஒன்று. தெற்கில் மைசூரிலிருந்து ஓர் அணி என நான்கு அணிகள் புறப்பட்டுள்ளன. அரசியலில் இருந்து மதத்...

## தற்போதைய தேர்தல் முறை பாதிப்பை ஏற்படுத்துகிறது

### அமைச்சர் ஹமீத் தெரிவிப்பு

தொகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் முறை மூலம் மக்கள் பெற்று வந்த திருப்தியும் சேவையும் இன்றைய விகிதாசார பிரதி...

பல்வேறு நன்மைகளை பெற்றுத்தந்தது ஒரு காலத்தில் விலைமதிக்க முடியாத சாதனமாக இருந்தன இன்று அவை அறவே பெறுமதி இழந்து...

## இன்றைய முக்கிய பிரச்சினை வடகிழக்கின் அசாதாரணநிலை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலையை உடனடியாக நிறுத்துவதற்கு சகல நடவடிக்கையும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இன்று இலங்கையில் முக்கிய பிரச்சினையாக வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண நிலையுள்ளது. எனவே ஒன்றிணைந்து இப்பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு தீர்வை ஏற்படுத்த முனைய வேண்டும். எனவே பிளவுபட்டு கொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை சகலரும் உணரவேண்டும் என்றார்.

கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரிடையே உரையாடும் போது மேற்படி கருத்தை அவர் தெரிவித்ததாக...

...செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ந்து உரையாற்றுகையில் ஏனையோரை விட நாட்டுப் பற்று எமக்கு அதிகமாகவேயுள்ளது. இலங்கையின் ஒரு அங்குல நிலத்தை கூட வெளிநாட்டவர்களுக்கு கொடுக்கமாட்டோம்.

வடக்கு. கிழக்கு யுத்தத்திற்கான நிதி ஒதுக்கீட்டை 25,000 லட்ச ரூபாவினால் குறைக்கதிட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் சகஜமான நிலை தோன்றினால் அவற்றை செய்ய முடியும் இந்த நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும். பாடசாலை சீருடைய விநியோகம் இலவச உணவு விநியோகம் ஜனசவிய திட்டம் போன்றவற்றில் பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளது. அவற்றை கண்டுபிடித்து மீளவிரைவில் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

## பயிற்சி நெறி

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்பு அலகினால் நடாத்தப்பட உள்ள தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி மாதா மாதம் நடாத்தப்பட உள்ளதாகவும் இதில் மாதாந்தம் நூறுபேர் வரை பயிற்சிபெற சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகவும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கந்தசாமி அவர்கள் நேற்று யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தில் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இதற்கான உறுப்பினர்களை யாழ். மாநகர சபையினுள் உள்ள சனசமூக நிலையங்கள் தமது சிபார்சுடன் அனுப்பி வைக்கலாம் எனவும் இதில் பயிற்சிபெற ரூபா நூறு அறவிடப்பட வேண்டும் எனவும் க.பொ.த சாதாரணதரம் கற்றவர்கள் இதில் இணையலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (17)

நிலையில் சமாதானப் படையின் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை ஐக்கிய நாடுகள்சபை படைவீரர்களை சுற்றிவளைத்த பொதுமக்கள் மீது அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் தாக்குதல் நடத்தியதில் 100 சோமாலியர்கள் அளிக்கும்படி ஆகும் ரிக்க செனட் சபை பிரதிநிதிகளை வற்புறுத்தியுள்ளது. சோமாலியா பொதுமக்கள் ஐக்கிய நாடுகள் சமாதானப்படையினரால் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவும் அமெரிக்க செனட்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வற்புறுத்தியுள்ளது.

இதனிடையே கடந்த வியாழக்கிழமை சோமாலியாவில் அமெரிக்க ஹெலிக்கொப்டர்கள் நடாத்திய தாக்குதலில் பெண்களும், சிறுவர்களும் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா வருத்தம் தெரிவித்துள்ளது.

## யாத்திரைப் போராட்டம் பாரதீயஜனதா நடாத்துகிறது

அரசியலில் மதம் கலப்பதை தடுக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகளுக்கு எதிராக நேற்று பாரதிய ஜனதாக் கட்சியாத்திரைப்போராட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

பாரதீய ஜனதாவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நான்கு யாத்திரை அணிகளும் நேற்று தமது பயணத்தைத் தொடங்கின. வரும் இரண்டு வார காலத்தில் இவை அனைத்துமாகச் சேர்ந்து 15 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை கடக்கவுள்ளன. இவ் யாத்திரைகள் 14 இந்திய மாநிலங்கள் வழியாகச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. வடபகுதியில் ஜம்மு நகரிலிருந்து ஓர் அணியும், மேற்கு பகுதியில் காந்தி பிறந்த ஊரிலிருந்து ஓர் அணி. கிழக்கில் கல்கத்தாவில் இருந்து ஒன்று, தெற்கில் மைசூரிலிருந்து ஓர் அணி என நான்கு அணிகள் புறப்பட்டுள்ளன. அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்கும் சட்டத்திற்கு எதிராக பாரதீயஜனதாக்கட்சி நடத்தும் இயக்கத்தின் பகுதியாகவே இந்த யாத்திரைகள் நடைபெறுகின்றன. இந்தச் சட்டத்தை ஜனநாயகத்திற்கு எதிரானதென்றும் ஒருகட்சி ஆட்சிக்கு ஒருபடி என்றும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி அவர்கள் வர்ணித்துள்ளார்.

இந்திய அரசியலிலிருந்து அகற்றப்படவேண்டியது ஊழல்தான் அன்றி மதம் அல்ல எனவும் அவர் கூறினார்.

இந்துமதக் கருத்துக்களை வலியுறுத்தும் புதிய போக்குடன் தொடர்புகொண்ட பாரதீய ஜனதாக் கட்சியே இந்தக் கட்சியின் முக்கிய இலக்கு என்று கருதப்படுகிறது.

இதேவேளை இம்மாதம் 25ஆம் திகதி நான்கு யாத்திரை அணிகளும் மத்திய பிரதேச மாநிலத் தலைநகரான போபாலில் சங்கமமாகின்றன. அப்போது இம் மிகப்பெரும் அணி டில்லியிலுள்ள அரசிற்கு எதிராகத் இரட்டிக் காட்டுவதே பாரதீய ஜனதாவின் நோக்கம் எனலாம்.

## தற்போதைய தேர்தல் முறை பாதிப்பை ஏற்படுத்துகிறது

### அமைச்சர் ஹமீத் தெரிவிப்பு

தொகுதி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் முறை மூலம் மக்கள் பெற்று வந்த திருப்தியும் சேவையும் இன்றைய விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கீழ் இடைப்பதில்லை. பதிலாக மாறுபட்ட அபிப்பிராயங்களை வளர்க்கும் முறை வழிகோலியுள்ளது இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத் கடமொன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; 1931இல் நாம் பெற்ற சர்வசன வாக்குரிமை 1977வரை பல்வேறு நன்மைகளை பெற்றுத்தந்து ஒரு காலத்தில் விலைமதிக்க முடியாத சாதனையாக இருந்தன இன்று அவை அறவே பெறுமதி இழந்துவிட்டன. மனித சமுதாயத்தின் விமோசனத்துக்கு வழி சமைத்து வந்த வாக்குகள் இன்று வழிதவறி விட்டன. கொள்கைக்கு முன்னுரிமை தந்த வாக்குகள் இன்று வாக்கு மாறிவிட்டன.

விருப்பு வாக்குமுறை இன, மத, குலபேத உணர்வுகளை உருவாக்க வழிசெய்துள்ளன என்றார்.

## விகிதாசாரதேர்தல்முறைக்கு சுதந்திரக்கட்சி எதிர்ப்பு

தற்பொழுது உள்ள விகிதாசார தேர்தல் முறையில் திருத்தம் கொண்டுவரப்படும் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் புதிய கொள்கைப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக தேர்தல் தொகுதி ரீதியாக பாராளுமன்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை கொண்டுவரப்படும் எனவும், தேர்தல் தொகுதி எல்லைகளை மீள்பரிசீலனை செய்ய ''தேர்தல் தொகுதி எல்லை மீள்பரிசீலனை ஆணைக்குழு'' நியமிக்கப்படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மரணமடைந்தால் அல்லது பதவிதுறந்தால் அவரது வெற்றிடத்தை நிரப்ப இடைத்தேர்தல் நடாத்தப்படும் எனவும் அக்கொள்கைப் பிரகடனம் மேலும் கூறுகிறது.

மேலும் பாராளுமன்றஉறுப்பினர் ஒருவர் கட்சிமாற அனுமதிக்கப்படுவார் எனவும் அவ்வாறு கட்சிமாறுபவர் இடைத்தேர்தல் ஒன்றில் போட்டியிடவேண்டிவரும் என்றும்அப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் பாடசாலைமட்ட வாழ்க்கைத் திறன் பொருட்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 8 30 மணி தொடக்கம் பிற்கல் 2 30 மணிவரைமேற்படி பாடசாலை தற்போது இயங்கிவரும் யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் நடைபெறும். (22)

யாக நிறுத்துவதற்கு சகல நடவடிக்கையும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

இன்று இலங்கையில் முக்கிய பிரச்சினையாக வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண நிலையுள்ளது. எனவே ஒன்றிணைந்து இப்பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு தீர்வை ஏற்படுத்த முனைய வேண்டும். எனவே சண்டையிட்டு கொண்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை சகலரும் உணரவேண்டும் என்றார்.

கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரிடையே உரையாடும் போது மேற்படி கருத்தை அவர் தெரிவித்ததாக ''லங்காதீப'' பத்திரிகை

### கொழும்பில்

கொட்டாஞ்சேனை கிலப்பனை, புறக்கோட்டைப்பகுதிகளில் பலர் பிடிபட்டனர். விடுதிகள், அறைகள் தேடித் திரிந்தவர்கள்இவர்களுள் பலர். கணக்கியல், கொம்பியூட்டர் படிப்பு தொடர முயல்வதாகச் சிலர் கூறியதாகவும் சிலர், வெளிநாடு செல்ல ஆயத்தம் செய்வதாகவும் பொலிசார் கூறினர்.

ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் வீரக்குமார் குலவீரசிங்கமும் கொம்பியூட்டர் படிக்க வந்ததாகக் கூறிக் கொண்டே கொழும்பு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

நாட்டுப் பற்று எமக்கு அதிகமாகவேயுள்ளது. இலங்கையின் ஒரு அங்குல நிலத்தை கூட வெளிநாட்டவர்களுக்கு கொடுக்கமாட்டோம்.

வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கான நிதி ஒதுக்கீட்டை 25,000 லட்சம் ரூபாவினால் குறைக்கதிட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் சகஜமான நிலை தோன்றினால் அவற்றை செய்ய முடியும் இந்த நிதியை அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும். பாடசாலை சீருடைய விநியோகம் இலவச உணவு விநியோகம் ஜனசவிய திட்டம் போன்றவற்றில் பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளது. அவற்றை கண்டுபிடித்து மிகவிரைவில் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

## மாணவர் மதிய உணவு முத்திரை

(கொழும்புத்துறை)

வறுமை நிவாரண ஆணையாளரால் வழங்கப்படும் மாணவர் மதியஉணவு முத்திரை மே மாதத்திற்குரியது. யாழ். செயலக சமூகசேவைத் திணைக்களத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

சகல பாடசாலை மாணவர்களும் கடந்த மே மாதத்திற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரையைப் பெற்றுத் தமக்குரிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 11-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10879

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்.

42-2865, 42-6452 26-5760, 24-5460, 40-2780
26-6303, 24-7623, 24-6972, 28 4367, 41-8155
42-2364, 24-7084, 24-5496, 41-8629, 24-2038
26-3473, 24-6168.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்.

43-3576, 42-3329, 41-7693, 26-7353, 26-3412
26-1989, 27-9327, 26-1495, 27-8751, 40-2295
28-1020, 24-5623, 24-6846, 27-2088, 24-5679
28-1062, 24-0415, 27-2026, 24-9490, 41-9530
26-2317, 24-4476, 41-2659, 27-6024.

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி சோபிகா இராமச்சந்திரன்

வேலணையைச் சேர்ந்த இராமச்சந்திரன் புஸ்பலதா தம்பதிகளின் செல்வப் புதல்வி சோபிகா இன்று தனது முதலாவது பிறந்தநாளை கொக்குவிலில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, டென்மார்க்கில் உள்ள வசந்தன் மாமா, பிரான்ஸில் உள்ள உதயன் மாமா, சிவா மாமா மற்றும் உற்றார், உறவினர்கள் இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (6002)

## இஸ்ரேல்-பி. எல். ஓ ஒப்பந்தம் நாளை கைச்சாத்தாகும்

பி. எல். ஓ விற்கும் இஸ்ரேலுக்குமிடையே பாலஸ்தீனம் பற்றி எழுந்துள்ள உடன்பாட்டில் கையொப்பம் இடும் வைபவம் வாஷிங்டனில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் பி. எல். ஓ. சார்பாக யார் யார் கலந்து கொள்வர் என பி.எல். ஓ வின் செயற்குழுவில் நேற்றுக்காலை தீர்மானிக்கப்பட்டது.

வாஷிங்டன் செல்லும் பி, எல். ஓ குழுவின் தலைவராக அரபாத் இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ் உடன்படிக்கை கைச்சாத்திட அரபாத்திற்கு துணை நின்ற அனைவருமே வாஷிங்டன் செல்லவுள்ளனர்,

## பி.எல்.ஓ. விலிருந்து மேலும்பலர் வெளியேற்றம்

இஸ்ரேலுக்கும் பி. எல். ஓ விற்கும் இடையே உருவாகியுள்ள அமைதி ஒப்பந்தம் காரணமாக பி.எல் ஓ அணியில் மேலும் பிளவுகள் தோன்றியுள்ளன.

பி.எல்.ஓ வின் லெபனான்பகுதிப் பிரதிநிதியான சுத்திக்கள் கூத் அவர்கள் பி.எல்.ஓ வின் செயற்குழுவிலிருந்து பதவி விலகியுள்ளார்

இவருக்குமுன் நான்கு பி. எல்.ஓ. செயற்குழு உறுப்பினர்கள் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பதவி விலகியிருந்த செயற்குழு உறுப்பினர் உட்பட அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் இவ் வைபவத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு பி எல். ஓ தலைவர் யாசீர்அரபாத் அழைப்பு விடுத்துள்ளார்.

### கப். மலரவனின்

செய்து படத்துக்கு மாலை அணிந்தார். அதை அடுத்து திரு இளங்கோ தலைமையுரையையும் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை வெளியீட்டு உரையையும் தொடர்ந்து அரசியல்துறை பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் போர் உலா நூலை வெளியிட்டு வைக்க அதன் முதல் பிரதியை யாழ் மாவட்ட தளபதி திரு. அன்பு பெற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து சிறப்புரைகளை டாக்டர் ஜெயகுலராஜாவும் அரசியல் துறை பொறுப்பாளர் திரு தமிழ்ச்செல்வனும் நிகழ்த்தினர்.

நூலின் மதிப்புரைகளை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் திரு. சண்முகதாஸ் அவர்களும் திருமதி கோகிலா மகேந்திரன், திரு. சோ. பத்மநாதன் ஆகியோரும் நிகழ்த்தினர். நன்றியுரையை கலைபண்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் சேரலாதன் நிகழ்த்தினார். (சி)

### போர்க்கால

போராளியைபார்க்கமுடியவில்லையே என்று அவர் கவலை தெரிவித்தார். அவனைப் பார்க்க முடியாவிட்டாலும் அவனது எழுத்தை பார்க்க முடிகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

உலகில் பல நாடுகளிலும் போராட்டத்தைப் பற்றி, போராட்ட காலத்தைப் பற்றி, போராளிகளைப்பற்றி, சம்பவங்கள் பற்றி எல்லாம் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால் எங்கள் தேசத்திலே இந்த நாடுகளிலே நடைபெற்றதை விடவும், உயர்ந்ததொரு போராட்டம் இந்த உலகமே அதிசயிக்கின்ற போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இவை ஆவணமாகவோ நூலாகவோ வெளிவருவது இங்கு குறைவாகவே உள்ளது என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "சமுநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.